ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

21.10.2015 - மலர் 12, இதழ் 34




## ஐக்கிய நாடுகள் தினம்

ஒக்டோபர் 24

## யாழ். தேசிய ஜம்போரி

லட்சினை அறிமுகம்

விலை ரூபா 15/-

## இலங்கை வானொலியின் ஆரம்ப காலங்கள்...

## நெக்டோ பென்ச்சாவின் கதை


(15ஆம் பக்கம்)

'நெக்டோ' போத்தல்களை வெற்றி கொள்ளுங்கள்

## சீனப் பெருஞ்சுவரின் கடைசி முனை

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. இங்கிருப்பவற்றில் படங்களை வெட்டி எடுக்கவும், ஒட்டுவதற்கும் பயன்படுபவை எவை?


.......................................

2. படத்தில் உள்ளவற்றில் பாடசாலை உபகரணங்கள் என்ற வகைக்குள் அடக்க முடியாதவை எவை?

.......................................

3. ஒரு பொருளின் நீளம், அகலம், உயரம் என்பனவற்றை அளவிட இங்கிருப்பவற்றில் எதனைப் பயன்படுத்தலாம்?

.......................................






1. இந்த பஸ் எந்த சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது?
   1. பொதுப் போக்குவரத்து சேவை
   2. பாடசாலை போக்குவரத்து சேவை
   3. பயணிகள் சேவை

2. பஸ்ஸிலிருந்து எத்தனை பேர் இறங்கியிருக்கின்றனர்?

.......................................




3. பஸ்ஸின் இரு பக்கங்களிலும் கட்டிப் பறக்கவிடப்பட்டிருப்பவை எவை?

.......................................

4. கூடுதலாக இருப்போர் இறங்கியிருப்பவர்களா? ஏறியிருப்பவர்களா?

.......................................

1. மரத்தில் இருக்கும் சொற்களை பின்வருமாறு வகைப்படுத்துக.

* பழங்கள்:

.......................................

* நீரிலும் நிலத்திலும் வாழ்பவை:

.......................................

* மரக்கறிகள்:

.......................................

* தளபாடங்கள்:


.......................................




2. இவற்றில் எந்தவொரு பிரிவுக்குள்ளும் அடக்க முடியாதது எது?


.......................................

1. எத்தனை சதுரங்கள் உள்ளன?



.......................................

2. எந்த நிறத்திலான சதுரங்கள் கூடுதலாக உள்ளன?



.......................................

3. சிறிய நட்சத்திரங்கள் எத்தனை உள்ளன?



.......................................

4. இரண்டு வரிசைகளிலும் உள்ள வட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



.......................................

5. முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



.......................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



# தாய்லாந்து வான் பரப்பில் ஒரு தீப்பந்து


அண்மையில் தாய்லாந்தின் வான் பரப்பில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவமொன்று தொடர்பான படத்தொகுப்புகளும் காட்சித் தொகுப்புகளும் சமூக வலைத்தளங்களூடாக உலகெங்கும் பரவி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மேற்கு தாய்லாந்தின் காஞ்சனபுரி மாகாணத்தின் வான் பரப்பிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் அப்பகுதியால் சென்ற வாகனங்களில் பயணித்தவர்கள் தமது கெமராக்களில் இந்த தீப்பந்துக் காட்சியை பதிவுசெய்துகொண்டனர். இதனையடுத்து பலரும் இந்த காட்சித் தொகுப்புகளை ஃபேஸ்புக் உள்ளிட்ட, சமூக வலைத்தளங்களூடாக பகிர்ந்து கொண்டனர்.

## ஓர் எரிகல்லாக இருக்கலாம்...

இந்த தீப்பந்து ஓர் எரிகல்லாக இருக்கக்கூடும் என்றும், வளிமண்டலத்திற்குள் பிரவேசித்த வேளை அது தீப்பிடித்து எரிந்திருக்கும் என்றும் வானியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். புவிச் சுற்றுப்பாதையில் வலம் வரும் விண்கற்களிலிருந்து பிரியும் பாறைத் துண்டுகள்,





சிலவேளைகளில் பூமியின் ஈர்ப்புச்சக்திக்குட்பட்டு, எரிகற்களாக மாறி பூமியை நோக்கி வருவதுண்டு. இந்த பாறைத் துண்டுகளில் அளவில் சிறியவையாக இருப்பவை, பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசித்து, தரையை வந்தடையும் முன்னர் வான்பரப்பிலேயே தீப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறிவிடுகின்றன.

அந்தவகையில், தாய்லாந்து வான் பரப்பில் வெடித்துச் சிதறியது இவ்வகையான ஓர் எரிகல்லாக இருக்கலாம் என வானியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறாயினும், இது பற்றிய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தாய்லாந்து நாட்டு அதிகாரிகள் குறிப்பிடு கின்றனர்.

## ரஷ்யாவிலும் இது போன்றதொரு சம்பவம்

2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரஷ்யாவின் யுரேலஸ் புறநகர்ப் பகுதியின் வான் பரப்பிலும் இவ்வாறான வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது. இதன்போதும் தீப்பந்து போன்றதொரு விண்வஸ்து பிரகாசமான ஒளியுடன் அப்பகுதியை நோக்கி வந்து பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியமை பற்றி ஊடகங்களில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், பின்னர் அது பற்றி ஆராய்ந்ததில் அது பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசித்த ஓர் எரிகல் எனத் தெரியவந்தது.

இதோ வெளிவந்துள்ளது

சகல விதமான போட்டிப் பரீட்சைகளுக்கும் சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சை, க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பொது விணாப்பத்திரம் மற்றும் பல்வேறு பாடத்தேவை களுக்கும்.அரச ஆளணி ஆட்சேர்ப்பு பரீட்சை, பதவி உயர்வுப் பரீட்சைகள். S.L.A.S.S.L.E.S உட்பட பல்வேறு பாடத் தேவைக்கு சமகாலநிகழ் தரவுகள் தேவைப் படுவோருக்கு ஏற்றவகையில் தொகுக்கப் பட்டுள்ளது.




பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்
General Knowledge with Current Affairs

முன்னணி புத்தக நிலையங்களில் கிடைக்கும்

தொடர்புகளுக்கு 0777-911091

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக் குருவியும் குட்டி யானையும்



ஒரு காட்டில் யானைக் குட்டி ஒன்று தினமும் காட்டில் உள்ள மரக்கிளைகளை உடைத்து சாப்பிட்டு வந்தது. இப்படியே ஒருநாள் மரக் கிளைகளை உண்பதற்கு ஒரு மரத்தை அது நெருங்கிய போது, அங்கே இருந்த சிட்டுக் குருவி ஒன்று கையை ஆட்டி, ''வணக்கம் யானை நண்பா'' என்று கூறியது.

அதைக் கேட்ட யானைக்குட்டி அலட்சியமாக ''உன்னுடைய உருவம் என்ன? என்னுடைய உருவம் என்ன? நாம் எப்படி நண்பர்களாக இருக்க முடியும்?'' என்று கேட்டது. அதற்குக் குருவி ''ஏன் முடியாது. நட்புக்கு உருவம் முக்கியம் அல்ல. மனம்தான் முக்கியம். நான் இந்த மரத்தில் அதிக நாட்களாக இருக்கின்றேன். நீ வந்து இதன் கிளைகளை உடைத்து சாப்பிட்டால் நானும் இங்கே இருக்கிற மற்றப் பறவைகளும் எங்கே போய் தங்குவது?'' என்று கேட்டது.

அதற்கு யானை கேலியான குரலில் ''இந்த மரம் உங்களுக்கு வீடாக இருக்கலாம். ஆனால், எனக்கு இது தான் உணவு'' என்றது. அதைக் கேட்ட சிட்டுக் குருவி ''அப்படியென்றால் நமக்குள்ளே ஒரு போட்டி வைத்துக்கொள்வோம். அதில் நீங்கள் வெற்றி அடைந்தால்; இந்த மரத்தின் கிளைகளை உடைத்து சாப்பிடுங்கள். நான் வெற்றி அடைந்தால் மரத்தின் கிளைகளை நீங்கள் உடைக்கக்கூடாது என்றது.

''பொடிப் பயலே என்னோடு போட்டியா போடப் போகிறாய்? சரி சொல் என்ன உன் போட்டி?'' என்றது யானைக் குட்டி.

''நாம் இருவரும் அந்த மலை உச்சிக்குப் பறக்க வேண்டும். யார் முதலில் அங்கே போய்ச் சேர்கின்றோமோ அவர்தான் வெற்றியாளன். இதற்கு சம்மதமா?'' என்று கேட்டது சிட்டுக்குருவி. யானை தன்னால் பறக்க முடியாது என்று அறிந்திருந்தும் வீம்புக்காக இவ்வளவு தானா பறந்துட்டாப் போகுது என்று போட்டிக்கு ஒப்புக்கொண்டது.

போட்டி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் என்று நாள் முடிவு செய்யப்பட்டது. இப்போது யானைக்கு ஒரு பிரச்சினை, நான்கு நாளைக்குள்ளே எப்படியாவது பறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பறப்பது என்பது பெரிய விடயமா என்ன? என்று நினைத்த யானை வழியில் ஒரு கோழியைப் பார்த்து,

''கோழியே, எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும், நான் எப்படியாவது பறக்கவேண்டும். அதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்'' என்றது. அதைக்கேட்ட கோழி ''அது மிகவும் சுலபம் அண்ணே. நான் என்ன செய்கின்றேன் என்று நன்கு கவனித்து அதே மாதிரி நீங்கள் செய்தாலே போதும், நீங்கள் இலகுவாகப் பறக்கலாம்'' என்றது. யானையும் அதற்கு ஒப்புக்கொண்டது.

கோழி அங்கே இருந்த ஒரு பாறைமேல் ஏறி நின்று தனது செட்டைகளை அடித்தபடியே பறந்து, கீழே வந்து சேர்ந்தது.

''இவ்வளவுதான், சுலபமான காரியம்தான். எங்கே நீங்கள் பறவுங்கள் பார்க்கலாம்'' என்றது கோழி. யானையும் கஷ்டப்பட்டு பாறைமீது ஏறி நின்று கோழி மாதிரி பறக்க முயற்சி செய்தது. அவ்வளவுதான் ஒரு நொடிப் பொழுதில் கீழே விழுந்து அடிபட்டுவிட்டது. வலி பொறுக்க முடியாத யானை மிகவும் கோபங்கொண்டு ''ஏய்! கோழியே; பறப்பதற்கு வழி கேட்டால் நீ இடுப்பை முறிக்கிறதுக்கு வழி சொல்கிறாயே'' என்று கூறி மெதுவாக எழுந்து நின்றது.

அப்போது அந்தப் பக்கமாக ஒரு காகம் பறந்து வந்தது. அதை நிறுத்திய யானை, விஷயத்தைக் கூறவே, யானையை மேலே இருந்து கீழே வரைக்கும் பார்த்த காகம், உங்களுடைய பெரிய உடம்புதான் மிகப் பெரிய பிரச்சினையே. ஆனால், நான்கு நாளைக்கு உணவு உண்ணாமல் இருந்தால் நன்றாகப் பறக்கலாம்'' என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது காகம்.

இதனால், யானை எதுவும் சாப்பிடாமல் பட்டினிகிடந்து நான்கு நாட்களில் வாடி வதங்கிப் போனது. எழுந்து நிற்கக்கூட முடியாமல் மிகவும் சோர்ந்து போய்விட்டது. அப்போது அங்கு வந்த காகம் ''இதையே உங்களால் தாங்க முடியவில்லை யானை அண்ணா. அப்போ எப்படி நீங்கள் பறந்து ஜெயிக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டது. அதைக்கேட்ட யானைக்கு கோபம் தலைக்கேறியது. அது தனது தும்பிக்கையை சுழற்றிக் காகத்தை அடிக்க முற்பட்டது ''உங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. யானை அண்ணா எனக்கு இறக்கைகள் உள்ளது. உங்களுக்கு இறக்கைகள் இல்லை'' என்று கூறி காகம் பறந்து சென்றது.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த கழுகு அருகில் வந்து; ''ஏன் அண்ணே கோபப்படுகிறாய், பறக்கிறது சாதாரண விடயம் தான், அதுக்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் என்றால், அதோ, தெரிகிறதே உயரமான மலை, அதன் உச்சிக்குப் போய் அங்கிருந்து பறக்க முயற்சிசெய்தால் தானாகவே பறந்துவிடுவீர்கள்'' என்றது. யானைக்கு சற்று தயக்கமாக இருந்தாலும் எப்படியாவது சிட்டுக் குருவியை வென்றுவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் மலை ஏறி உச்சியை சென்றடைந்தது. அங்கிருந்து குதித்து பறக்க முயற்சித்த வேளை ''யானை அண்ணே, இங்க இருந்து குதிச்சா நீங்க இறந்துவிடுவீர்கள். இங்கிருந்து பாருங்கள் காடு எவ்வளவு அழகாக காட்சியளிக்கிறது. இதுக்குள்ளே ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு வாழ்க்கை உள்ளது. இதில் யாருமே பெரியவர்கள் இல்லை, யாரும் சிறியவர்களும் இல்லை. இந்தக் காடு மனிதன் உருவாக்கியதில்லை. காலம் காலமாக இருந்து கொண்டே வரும் இயற்கை. இங்கு உங்களால் பறக்க முடியாது, ஆனால், என்னால் சின்னக் கல்லைக்கூடத் தூக்க முடியாது'' என்றது சிட்டுக் குருவி.

யானை யோசித்துவிட்டு 'சிட்டுக் குருவி சொல்வதும் சரிதான், நாம் ஏன் தேவையில்லாமல் அதனோடு போட்டி போட வேண்டும். ''சே... நான்தானே திமிராக நடந்துகொண்டேன் என்று நினைத்து சிட்டுக்குருவியிடம் ''நாம் இனிமேல் நல்ல நண்பர்கள் ஆகிடலாம்'' என்று யானை கூறியது. குருவியும் அதை ஏற்றுக்கொண்டு இனிதே இரண்டும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன.



# குருடரின் விளக்கு

ஒரு கிராமத்தில் கண் பார்வையற்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் இரவு வேளையில் வெளியே செல்லும்போது கையில் ஒரு விளக்கை எடுத்துச் செல்வது வழக்கம். அவர் அவ்வாறு ஒருமுறை வெளியே கையில் விளக்கோடு சென்றபோது, அவ்வழியாக வந்த வாலிபர்கள் சிலர் அந்த அவரைப் பார்த்து ''ஐயா; உங்களுக்குத்தான் கண் தெரியாதே, பின்னர் எதற்காக கையில் விளக்கை எடுத்துச் செல்கிறீர்கள்'' என கேலி செய்து சிரித்தனர்.

வாலிபர்களின் கேள்விக்கு நிதானமாக பதில் அளித்த அவர், ''எனக்கு கண் தெரியாது என்பது உண்மைதான். ஆனால், இந்த விளக்கை நான் எனக்காகக் கொண்டுவரவில்லை. உங்களைப்போல கண் நன்றாகத் தெரிந்தவர்கள் என்மீது மோதாமல் இருக்கத்தான் இந்த விளக்கைக் கொண்டு செல்கிறேன்'' என்றார். அவரது பதிலைக் கேட்ட வாலிபர்கள் தங்களது முட்டாள்தனமான செயலுக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டனர்.

நாம் பேசும்முன் யாரையும் புண்படுத்தாமல் சரியாகத்தான் பேசுகிறோமா? என நன்றாக யோசித்துவிட்டுப் பேச வேண்டும் என்பதையே இக்கதை உணர்த்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிப்பு; மனித வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பு

வளிமண்டல வெப்பம் அதிகரித்துச் செல்வதானது, தற்காலத்தில் முழு உலகமும் எதிர்கொண்டிருக்கும் மாபெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால், சூழல் வெப்பநிலை மாற்றம், வறட்சி, குறுகிய காலத்தில் கடும் மழை, புயல் என திடீர் காலநிலை மாற்றங்களும் அனர்த்தங்களும் ஏற்படுவதோடு, மனிதன் உட்பட உயிரினங்களின் வாழ்க்கைக்கும் சூழலுக்கும் அது பேரழிவை ஏற்படுத்துவதாக உள்ளது.

வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிப்பதனால் புவியின் வெப்பநிலை அதிகரிப்பதே, புவி வெப்பமடைதல் எனப்படுகின்றது. பச்சைவீட்டு வாயுக்களான காபனீரொட்சைட், க்ளோரோஃப்ளோரோ காபன், மீதேன், ஓசோன், நைதரன் ஒக்சைட் போன்றவற்றின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதே, புவி வெப்பமடைவதற்கு பிரதான காரணமாகும்.

பச்சை வீட்டு விளைவு நிகழாமல் இருக்க வேண்டுமாயின் புவி வெப்பத்தின் அளவு குறைய




வேண்டும். அதற்கு வளிமண்டலத்தை நோக்கி வெளியிடப்படும் பச்சைவீட்டு வாயுக்களின் அளவு கட்டுப்படுத்தப்பட வேண்டும். பச்சைவீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட் வாயுவின் அதிகரிப்பே முக்கிய இடத்தை வகிக்கின்றது. எரிபொருட்கள் அதிகளவு தகனம் செய்யப்படுவதாலேயே பெருமளவு காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் கலக்கின்றது. தவிர, கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை, வாகனங்களின் புகை, கழிவுகள் எரிப்பு போன்ற வழிகளினாலும் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் கலக்கின்றது. எனவே, வளிமண்டலத்தில் சேரும் காபனீரொட்சைட்டின் அளவினைக் கட்டுப்படுத்துவதே இங்கு பிரதான தேவையாக இருக்கின்றது.

சூழலில் காபனை அகற்றும் ஆற்றல் மரம்-செடி-கொடிகளுக்கு மாத்திரமே உண்டு. எனினும், உலகில் ஒவ்வொரு விநாடியும் ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் பரப்புள்ள இயற்கை காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால், வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் வாயுவின் அளவு கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு தடைப்படுகின்றது. எனவே, இந்நிலையை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின் உலகில் காடுகளின் அளவை அதிகரிக்க வேண்டும். காடழிப்பு தடுக்கப்பட வேண்டும். வளிமண்டல வெப்பத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ள பச்சைவீட்டு வாயுக்கள் சூழலில் விடுவிக்கப்படும் வழிகள் கண்டறியப்பட்டு அதற்கான மாற்றுத் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் வளிமண்டல வெப்பம் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த முடியும்.



## மின் நுகர்வை சிக்கனப்படுத்துவோம்



மின் நுகர்வை நம்மால் தவிர்க்க முடியாது. ஆனால், சிக்கனப்படுத்தலாம். இதன்மூலம் மின்வெட்டு மற்றும் மின்சாரக் கட்டணம் என்பனவற்றைக் குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவே, மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதற்கான சில வழிமுறைகளை இங்கு பார்ப்போம்.

- ★ நித்திரைக்குச் செல்லும் முன்பும், வீட்டை விட்டு வெளியே செல்லும் முன்பும் அனைத்து மின் சாதனங்களும் முழுமையாக அணைக்கப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- ★ எந்த மின்சாதனத்தை வாங்கும்போதும் அது தரமானதாகவும் நீடித்து உழைக்கக்கூடியதாகவும் குறைந்த மின் நுகர்வில் இயங்கக்கூடியதாகவும் இருக்கின்றதா? என்பதைப் பார்க்க வேண்டும்.
- ★ குறிப்பிட்ட கால இடைவெளியில் குளிர்சாதனப்பெட்டியை 'சேர்விஸ்' செய்வதால் மின் நுகர்வு குறையும்.
- ★ குளிர்சாதனப்பெட்டிமீது நேரடியாக சூரிய ஒளி படாமலும், அதன் பின்புறம் காற்றோட்டம் இருக்குமாறும் வைப்பதால் மின் நுகர்வு குறையும்.
- ★ வீடுகள் அமைக்கும்போது நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் வரும்படி ஜன்னல்களை அமைத்தால் பகலில் மின்சாரத்தை பெருமளவு மிச்சப்படுத்தலாம்.
- ★ தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் நேரம் மட்டும் மின் விளக்குகள், மின்விசிறிகளைப் பயன்படுத்த வேண்டும்.




| | | |
|---|---|---|
| சோலார் பெனல் வெல்பவர் | போட்டி இல - 9 இன் வெற்றியாளர் | ரிம்லா ரியாஸ், 5/1, கல்முல்ல வீதி, கல்பொக்க,வெலிகம. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டேயிலுள்ள கோட்டை



**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை என்பது 15 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் நிலவிய ஒரு மிகச் சிறப்பான இராட்சியமாகும். இதுவே இலங்கையை ஐக்கியப்படுத்துவதில் வெற்றிபெற்ற இறுதி அரசுமாகும். கோட்டை இராட்சியத்தில் அழகேஸ்வரன் என்பவனால் பாரிய கோட்டை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதனால், அதற்கு கோட்டை இராச்சியம் எனப் பெயர் வந்தது. சிங்கள மொழியில் 'கோட்டே' என்ற சொல் 'கோட்டை' யை குறிப்பதாக உள்ளது.**

வடக்கிலிருந்து மேற்குக் கரையோரமாக மேற்கொள்ளப் பட்ட படையெடுப்புகளை தடுப்பதற்காக மூன்றாம் விக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத் தில் கம்பளை இராசதானியின் அமைச்சராக விளங்கிய அழகேஸ்வரன் (1370-1385) அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த கோட்டை, 1412 இல் ஆறாம் பராக்கிரமபாகுவினால் அவனின் தலைநகராக தெரிவு செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் கோட்டையைச் சுற்றி உள்ள நிலம் சதுப்பு நிலமாக இருந்தமையால் மிகச் சிறந்த பாதுகாப்புப் பிரதேசமாகவும் இது இருந்தது.





கம்பளை சூரிய சக்கரவர்த்தியின் ஆக்கிரமிப்பே கோட்டை இராச்சியம் உருவாக பிரதான காரணமாக அமைந்தது. ரயிகம பிரதேசம் வரை போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு நீடித்தமையினால் அப்பிரதேசத்தில் வரி சேகரித்த ஆரிய சக்கரவர்த்திக்கு வீர அழகேஸ்வரனால் தியவன்னா ஓயாவில் சேற்று நிலத்தில் கோட்டை ஒன்று கட்டப்பட்டமையே கோட்டை இராசதானியின் ஆரம்பமாக அமைந்தது.

அக்காலத்தில் 6 ஆம் பராக்கிரமபாகு சீனா சென்று திரும்பி 1412 இல் அரசை ஏற்றான். 1415 இல் அவனது முடிசூட்டு விழா நடைபெற்றது. இந்தக் கோட்டை இருந்த இடத்தில் அரச மாளிகை ஒன்றை நிறுவி தந்ததாதுக் கோவிலையும் அமைத்து புதிய நகருக்கு பொலிவையும் புகழையும் அவன் அளித்தான். அதன்பின் அந்த ஆட்சி 1521 இல் 'விஜயபாகு கொல்லய' வரை நீடித்தது. அதன்பின் அந்த இராச்சியம் முழுமையாக 03 பிரிவுகளாகப் பிரிந்தன.

ராஜாவலி மற்றும் மகாவம்சத் தில் குறிப்பிட்டுள்ளபடி கோட்டை இராசதானியின் கட்டடங்கள் மிகவும் முறையான வாஸ்து விஞ்ஞானத்தின்படி 6 ஆம் பராக்கிரமபாகுவால் கட்டப்பட்டதாக கூறப்படுகின் றது. அங்கு வாஸ்து சாஸ்திர நிர்மாணங்கள் குறித்து ஆராயும் பொழுது சமய மற்றும் வேறு வாஸ்து விஞ்ஞானத்தின் அடிப் படையில் மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆய்வு செய்யலாம். அரச வாஸ்து சாஸ்திரத்தின் கீழ் கோட்டை, அரச மாளிகை, அழகேஸ்வரன் வாசஸ்தலம் என்பனவற்றை ஆராயலாம். கோட்டை என்பது ஆட்சியாளரும் அவரது பரிவாரங்களும் பாதுகாப் பாக வாழ்வதற்காக கட்டி எழுப்பப்படும் பாதுகாப்பு வலயமாகும். அத்தகைய வலயம் நாடொன்றினதோ பிரதேசமொன்றினதோ ஆட்சி மையமாகவும் இருக்கலாம். இலங்கையில் கி.பி. 5 ஆம் நூற்றாண்ட ளவில் இருந்து இத்தகைய கோட்டைகள் கட்டி எழுப் பப்பட்டதாக மகாவம்சம் தெளிவுபடுத்துகிறது.

கோட்டையைச் சுற்றி கட்டி எழுப்பப்பட்டுள்ள பாதுகாப்பு சுவர்கள் மற்றும் நீர் அகழி என்பன இன்றும் சிறந்த சாட்சிகளாக (சான்றாக) திகழ்கின்றன. உற்சுவர், வெளிச்சுவர் என இருவகைச் சுவர்களும் அத்தோடு, தொடர்புடைய இரு அகழிகளும் அங்குள்ளன. இந்த அகழிகள் நீரால் நிறைந்துள்ளன. வெளிச் சுவர் மற்றும் அகழிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் பல இன்றும் எஞ்சி உள்ளன.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான மனித சமுதாயத்தை உருவாக்க முயற்சிக்கும் ஐ.நா.சபை


ஐ.நா.சபையின் இலட்சினை

ஐ.நா.சபை வளாகத்தின் வெளித்தோற்றம்

## ஒக்டோபர் 24 ஐக்கிய நாடுகள் தினம்


ஐ.நா மண்டபத்தின் உள்தோற்றம்

பல நூற்றாண்டுகளாக மனிதன் பல்வேறு போர்களில் ஈடுபட்டாலும் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு பெரும் உலகப் போர்கள் மனித சமுதாயத்தின் இருப்பையே உலகில் ஆட்டம் கொள்ளச் செய்தன. போர்கள் முடிந்து ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமாதானம் ஏற்பட்டாலும் பின்னர் அச்சமாதானம் நிலைபெறவில்லை. இதனால், உலக மக்களிடையே ஒரு சிநேகபூர்வமான, நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி சமாதானத்தை நிலைநாட்டும் நோக்கில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அமைப்புகள் உலகெங்கும் அமைக்கப்பட்டன.

அவ்வாறு உருவான அமைப்புகளில் சில குறுகிய காலத்திலேயே மறைந்து போயின. முதலாம் உலகப் போர் முடிந்தபின் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் குறுகிய காலத்தில் மறைந்து போனமை இதற்கு தக்க உதாரணமாகும்.

ஆனால், உலக சமாதானத்தை மட்டும் அடிப்படைக் கொள்கையாக கொள்ளாமல், சமூக, பொருளாதார அபிவிருத்திகளையும் குறிப்பாக கல்வி, சுகாதார மேம்பாட்டுக்காகவும் சிறுவர் பாதுகாப்பு, மனித உரிமை, மனிதனின் உணவுத் தேவை உள்ளிட்ட பல்வேறு மனித மாண்பின் உன்னத உயர்வுக்காகவும் பாடுபடும் நோக்கில் அகில உலக அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை கடந்த சுமார் 70 வருடங்களாக தொடர்ந்து தன்து சிறப்பான பணியை ஆற்றி வருகின்றது.

### ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனங்களாவன

* சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
* உணவு விவசாயத் தாபனம் (FAO)
* வர்த்தகம், அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD)
* சர்வதேச நாணய நிதியம் (IMF)
* ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
* ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNPFA)
* ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமையம் (UNIDO)
* உலக உணவுத் திட்டம் (WFP)
* ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனம் (UNESCO)
* ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF)
* உலக சுகாதார தாபனம் (WHO)
* புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD)
* வர்த்தகம், தீர்வை பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாடு (GATT)
* ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் (UNHCR)

### ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்

உலகில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்திய இரண்டாம் உலக மகா யுத்தத்தால் பலகோடி மக்கள் ஊனமுற்றும் இருப்பிடங்களை இழந்தும் சொத்துக்களை முற்றாக இழந்தும் சொல்லொணாத் துயரங்களை அடைந்தனர். 1939 இல் ஆரம்பித்த இந்த யுத்தம் 1945 இல் முடிவுக்கு வந்த கையோடு


1945 இல் உலகத் தலைவர்கள் கைகோர்த்தபோது:..

இனிமேல் இத்தகைய யுத்தம் ஏற்படாமல் நிரந்தர சமாதானத்தை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என உலகத் தலைவர்கள் உணர்ந்தனர். 'யுத்தம் ஏற்படாமல் அனைவரும் ஒன்றிணைவோம்' என்ற தாரக மந்திரத்துடன் உலகத் தலைவர்கள் கைகோர்த்து 1945 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி சென் பிரான்சிஸ்க்கோவில் நடைபெற்ற மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையை அமைக்கும் பிரகடனத்தை அங்கீகரித்தனர். இம்மாநாட்டில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி பாதுகாப்புச் சபையில் இன்று நிரந்தர அங்கத்துவ நாடுகளாகத் திகழும் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய சோவியத் சமவுடமை குடியரசு (ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகள் இந்த ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தில் கையொப்பம் இட்டு அதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டன. இவ்வாறே, ஐக்கிய நாடுகள் சபை தோன்றியது. இதனை முன்னிட்டே ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் தினம் என பிரகடனப் படுத்தினர்.

### ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ மொழிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவல்கள் பின்வரும் 6 மொழிகளில் நடைபெறுகின்றன

* ஆங்கிலம்
* பிரெஞ்ச்
* ஸ்பானிஷ்
* அரபு
* சீன மொழி
* ரஷ்ய மொழி


ஐ.நா சபையின் தேவையை உணர்த்திய 2 ஆம் உலக யுத்தத்தின் அழிவுகள்

### உறுப்பு நாடுகள்

ஆரம்ப மகா நாட்டில் 50 நாடுகள் மாத்திரம் பங்குபற்றினாலும் இன்று ஐக்கிய நாடுகள் சபையில் 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

-இரஞ்சித் ஜெயகர்



### ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் செயல் நடவடிக்கைகள் உலகெங்கும் பரவியுள்ளன. இவ்வாறு முழு உலகமும் நடைபெறும் சகல நடவடிக்கைகளும் பின்வரும் 6 பிரதான நிறுவனங்கள் ஊடாகவே நடைபெறுகின்றன.

* பொதுச் சபை
* நம்பிக்கை பொறுப்புச் சபை
* பாதுகாப்புச் சபை
* சர்வதேச நீதிமன்றம்
* பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி
* செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ...............................................................

01) **கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. தாவரமொன்றில் அதிக பயனை தரக்கூடிய கிளைகள் எவை?

   1. மரத்தின் கீழ் உள்ள கிளைகள்
   2. மரத்தின் மத்தியிலுள்ள கிளைகள்
   3. மரத்தில் சூரிய ஒளி அதிகமாக கிடைக்கும் கிளைகள்

02. கடலில் நடைபெற முடியாத நிகழ்வு எது?

   1. சுனாமி 2. வானவில் 3. கடலரிப்பு

03. டெங்கு நோயாளி ஒருவர் தவிர்க்க வேண்டிய ஒன்று;

   1. சிவப்பு நிற பானங்களை அருந்துதல்
   2. நீராகாரங்களை அருந்துதல்
   3. நன்கு ஓய்வெடுத்தல்

04. ஹம்பாந்தோட்டையில் கடலுடன் கலக்கும் நதி எது?

   1. களனி கங்கை 2. மகாவலி கங்கை
   3. வளவே கங்கை

05. இலங்கையின் தேசிய மலர் எது?

   1. ரோஜா 2. தாமரை 3. நீல அல்லி

06. பின்வருவனவற்றுள் போக்குவரத்து சமிக்ஞை அல்லாதது;



1. 2. 3.

07. மிகவும் சிறிய வித்தைக் கொண்ட தாவரம் எது?

   1. கடுகு 2. பயறு 3. பப்பாசி

08. ஏறு கொடித் தாவரங்களில் ஒன்று;

   1. வல்லாரை 2. பூசணி 3. வெற்றிலை

09. ஐந்து இதழ்களைக் கொண்ட மலர் எது?

   1. மல்லிகை 2. காட்டு மல்லிகை 3. செவ்வரத்தை

10. தலைகீழாகத் தொங்கி ஓய்வெடுப்பது;

   1. வெளவால் 2. ஆந்தை 3. காகம்

11. தரிப்பிடங்களை சுற்றி ஓடும் விளையாட்டு;

   1. கிரிக்கெட் 2. எல்லே 3. பூப்பந்து

12. தாவர இனங்களில் துளசி ஒரு ................................ தாவரமாகும்.

   1. மூலிகைத் 2. பழவகைத் 3. வாசனைத்




13. நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் யாது?

   1. அதிக புரத உணவை உண்ணுதல்
   2. அதிக இனிப்பு உணவுகளை உண்ணுதல்
   3. அதிகளவில் சோற்றை உண்ணுதல்

14. பின்வரும் தாவரங்களில் முட்கள் உள்ள தாவரம்;

   1. தூதுவளை 2. மிளகு 3. நாயுருவி

15. குருவிச்சை தாவரம் ஆனது;

   1. பற்றிப் படரும் தாவரம் 2. ஒட்டுண்ணித் தாவரம்
   3. ஏறு கொடித் தாவரம்

02) **இங்குள்ள சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.**

முட்டை, திறந்து, வல்லாரை, மரத்தால், இலைகளை, கறையான்கள், வேப்பிலை, பாம்பு

01. மரவள்ளிக்கிழங்கை அவிக்கும்போது எப்போதும் ...................................... வைத்து சமைக்க வேண்டும்.

02. ...................................... பச்சையாக உண்ணக்கூடிய உணவாகும்.

03. கோழி ...................................... சிறந்த ஒரு நிறை உணவு ஆகும்.

04. அனேகமான தளபாடங்கள் ...................................... ஆனவை.

05. தாவர உண்ணிகளில் அனேகமானவை ...................................... உணவாக உண்ணுகின்றன.

06. ...................................... புற்றுக்களை அமைக்கின்றன.

07. இரவு நேரங்களில் ஊசலாடும் பிராணிகளில் ..............................ம் ஒன்றாகும்.

08. ...................................... ஆரம்ப காலங்களில் இருந்து ஒளடதமாக பயன்படுத்தப்படுகின்றது.

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### புலமைப்பரிசில் விடைகள் - கணிதம்

**(ஒக்டோபர் 14 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *01)* | *01. 1* | *03. 2* | *05. 3* | *07. 2* | *09. 3* |
| | *02. 2* | *04. 3* | *06. 3* | *08. 3* | *10. 3* |

| | | |
|---|---|---|
| *02)* | *01. ரூபா 5.50* | *04. 102* |
| | *02. 2/5* | *05. ரூபா 225.00* |
| | *03. ரூபா 225.00* | *06. நீளம் 6cm அகலம் 3cm* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியின் ஆரம்ப காலங்கள்...







## இலங்கை வானொலி

வானொலித் துறையைப் பற்றி அறியவேண்டுமாயின் முதலில் இலங்கையில் உள்ள வானொலித்துறையை அறியவேண்டியதும் முக்கியமாகும். அதன்படி 'இலங்கை வானொலி' நிலையமே இலங்கையின் முன்னணி வானொலி ஒலிபரப்பு நிலையமாக திகழ்ந்ததாகும். ஆசியாவின் முதலாவது வானொலி நிலையமும் இதுவாகும்.

இங்கிலாந்தின் பிபிசி வானொலி ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு மூன்றாண்டுகளே கடந்த நிலையில் மேற்படி இலங்கை வானொலி ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதாவது, 1922 ஆம் ஆண்டில் இலங்கை தந்தித் திணைக்களத்தினாலேயே இலங்கையில் பரீட்சார்த்த முறையில் இந்த ஒலிபரப்பு நடைபெற்றது. 1921 ஆம் ஆண்டு 'தந்தி' திணைக்களத்திற்கு தலைமைப் பொறியியலாளராக பணியாற்றிய எட்வர்ட் ஹாப்பர் என்பவர்தான் இலங்கையில் ஒலிபரப்பு சேவையினை ஆர்வத்துடன் முன்னெடுத்தவராவார். இவரே, இலங்கை ஒலிபரப்புத் துறையின் தந்தை எனவும் போற்றப்படுகின்றார்.

பரீட்சார்த்த ஒலிபரப்புக்கள் வெற்றி அடைந்ததன் காரணமாக, மூன்று வருடங்களின் பின்னர் உத்தியோகபூர்வமான ஒலிபரப்புக்கள் இலங்கையில் நடைபெறத் தொடங்கின. அதற்கமைய, இந்த ஒலிபரப்பு கொழும்பு வானொலி என்று அழைக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதியன்று கொழும்பு வெலிக்கடைப் பகுதியில் இந்த ஒலிபரப்பு ஆரம்பமாகியது. 1947 ஆம் ஆண்டில் இந்த ஒலிபரப்புச் சேவையின் பெயர் இலங்கை வானொலி (Radio Ceylon) என்று மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டு திணைக்களம் என்ற நிலையிலிருந்து கூட்டுத்தாபனம் என்ற நிர்வாக நிலைக்கு மாற்றப்பட்டு இலங்கை வானொலி என்பது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (Sri Lanka Broadcasting Corporation) என பெயர் மாற்றப் பட்டது.





இதனையே தற்போது எல்லோரும் SLBC என்று சுருக்கமாக குறிப்பிடுகின்றனர்.

மூன்று மொழிகளிலும் இங்கு ஒலிபரப்புக்கள் நடைபெற்று வருகின்றன. தமிழ்மொழியைப் பொறுத்தளவில் தேசிய சேவை, வர்த்தக சேவை என இரண்டு வகையிலான ஒலிபரப்புக்கள் ஆரம்பத்தில் இருந்தன. இவை தமிழ் சேவை-1 எனவும், தமிழ் சேவை-2 எனவும் அழைக்கப்பட்டன. இதில் தமிழ் சேவை-1 என்பது தேசிய சேவையாகவும், தமிழ் சேவை - 2 என்பது வர்த்தக சேவையாகவும் ஒலிபரப்புக் களை நடத்தின.

ஊடக பாடநெறி பாடம் 75

தேசிய சேவையானது, சமூகம் சார்ந்த விடயங்கள், நாடகங்கள், கலை, இலக்கிய, கலாசார, பண்பாடு சார்ந்த நிகழ்வுகளையொட்டிய விடயங்களை தாங்கிய ஒலிபரப்புச் சேவையாகும். அரச நிகழ்வுகளுக்கும் இந்த அலைவரிசையே ஒதுக்கப்பட்டது. வர்த்தக சேவையை எடுத்துக்கொண்டால், ஒலிபரப்பு நிலையத்திற்குத் தேவையான நிதி வசூலை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒலிபரப்பாகவே அமைந்தது. விளம்பரங்கள், விளம்பர நிகழ்ச்சிகள் ஊடாக பண வருவாயை ஈட்டும் ஒரு அலைவரிசையாக இது அமைந்தது.

வர்த்தக சேவையானது சினிமா சார்ந்த அம்சங்கள், பாடல்கள், போட்டி நிகழ்ச்சிகள், வினோத நிகழ்ச்சிகள், பொழுது போக்கு அம்சங்கள் என பல்சுவை அம்சங்களை ஜனரஞ்சகப் படுத்தி ஒலிபரப்பும் அலைவரிசையாக இருந்தமையினால் மக்கள் மத்தியில் இந்த அலைவரிசையானது, மிகுந்த ஜனரஞ்சகத்தைப் பெற்றதாக அமைந்திருந்தது.





(தொடரும்)

-ரிஷபன்

வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!





4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

07.10.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:
நீலத்திமிங்கிலம்
Pen Drive வெற்றியாளர்:
செல்வி கே.கமல்,
34, ஸ்ரீ சங்கபோ வீதி,
கவுடான, தெஹிவளை.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(21.10.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

Sponsored:
MYLOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)

இவ்வார கூப்பன்:
21.10.2015

விடை: ....................
பெயர்: ....................
முகவரி: ....................
தொ.பே.இல: ....................
பாடசாலை: ....................
தரம்: ....................
....................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகவும் பெறுமதியான 'ஒப்பல்' மாணிக்கம்




'ஒப்பல்' நூதனசாலையொன்று






கற்பாறைப் படிவுக்குள் உருவான 'ஒப்பல்' மாணிக்கம்

'ஒப்பல்' எனப்படும் அக்னி 'மாணிக்கம்' மாணிக்கக் கற்களில் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ள ஒரு மாணிக்கமாகும். புவியின் ஆழ்பகுதியில் உருவாகின்ற இவை வெட்டிப் பட்டை தீட்டப்பட்ட பின்னரே மிகவும் அழகாக ஜொலிக்கும்.

உலகின் மிகவும் பெறுமதி வாய்ந்த இத்தகைய ஒப்பல் மாணிக்கம் அண்மையில் அவுஸ்திரேலியாவின் அடிலெயிட்டில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இதனை 'வர்ஜின் ரெயின்போ' என்று அழைப்பர். தென் அவுஸ்திரேலியாவிலேயே இதனைக் கண்டுபிடித்தனர்.

மிகவும் அழகிய நிறம் கொண்ட இந்த மாணிக்கத்தின் பெறுமதி டொலர் மில்லியனை விட அதிகமாகும். மாணிக்கத்தின் நிறமும் அதன் ஒளிப்பிரவாகமுமே அதன் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகும். அதில் சிலிக்காவும் நீரும் அடங்கியுள்ளது. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கடல் டைனோசர்களின் படிம எச்சத்திலிருந்து இது உருவாகியிருப்பதாக கருதப்படுகின்றது. இதன் நீளம் இரண்டரை அங்குலத்தினை விட சற்று அதிகமாகும்.



வர்ஜின் ரெயின்போ மாணிக்கம்

அழகு, நிறம், அரிய தன்மை ஆகியவையே ஒரு மாணிக்கத்தின் பெறுமதியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகும். இந்த 'ஒப்பல்' மாணிக்கம் வானவில் நிறங்களைக் கொண்டுள்ளமையே அதன் விசேட அம்சமாகும்.

## உருவான விதத்தினால் பெறுமதி அதிகம்

'வர்ஜின் ரெயின்போ' போன்ற அழகிய ஒப்பல் கற்களின் விலை அதிகமாக இருப்பதற்கு காரணம் அவை உருவான விதங்களாகும். இவை சிலிக்கா மற்றும் நீர் கலப்பினால் உருவாகின்றன. இவை முதலில் 'ஜெல் போன்ற இயல்பினைப் பெறுகின்றன. பாறைகளில் உள்ள வெற்றிடங்களில் நிரம்பும் இந்த 'ஜெலி' கலவை அந்த வெற்றிடத்திற்கு ஏற்ப உருவத்தினைப் பெறுகின்றன. பின்னர் அது நிறம் கொண்ட மாணிக்கக்கல்லாக மாறுகின்றது.

தென் அவுஸ்திரேலியாவில் 'மெசோசொயிக்' காலப்பகுதியில் மிகப் பெரிய உள்ளகக் கடற்பகுதி இருந்துள்ளது. 'பிளேசியோசோரிஸ்' என்ற பெயரில் அழைக்கப்படும் ஆரம்பகால நீர்வாழ் உயிரினங்கள் இந்த கடலில் பரவலாக இருந்துள்ளன. இந்த உயிரினங்கள் இறந்த பின்பு கடல் ஆழ்பகுதியினுள் மூழ்கி அங்கு பல்வேறு கலவைகளுடன் சேர்ந்து உக்கி மக்கி பல ஆண்டுகள் அங்கேயே உறைந்திருந்துள்ளன. காலப்போக்கில் இந்த கடல் வற்றிப் பெரும் பாலைவனப் பகுதியான பின்னர் அதன் மேற்பகுதியில் மணல் கற்களின் அமிலத்தன்மை அதிகரித்துச் சென்றது. இதனால், உருகிப்போன மணல் கற்களிலிருந்து சிலிக்கா வெளியானதுடன், கீழே இருந்த களிமண் படலத்துடன் சிலிக்கா சேர்ந்துகொண்டது.

## உலக ஒப்பல்களின் ஊற்று

மிகவும் பெறுமதி வாய்ந்த ஒப்பற்ற அக்னி மாணிக்கமான 'ஒப்பல்' அவுஸ்திரேலியாவில் கிடைக்கின்றது. உலகுக்கு கிடைக்கும் ஒப்பல்களில் 95 சதவீதமானவை அவுஸ்திரேலியாவில் இருந்தே கிடைக்கின்றது. இந்த இடங்கள் மிகவும் வெப்பம் அதிகமான காலநிலையினைக் கொண்ட மனிதர்களினால் வசிக்க முடியாத பகுதியாகும். மத்திய அவுஸ்திரேலியாவானது, உள்ளகக் கடற்பிராந்தியமாக இருந்தபோதும் டைனோசர் வசித்த காலப்பகுதியிலுமே இந்த ஒப்பல் மாணிக்கம் உருவாகியிருக்கின்றது.

## கண்டுபிடிப்பது கடினம்

மிகவும் அதிக வெப்பநிலையும் தொடர்ச்சியான மணல் புயலும் இப்பகுதியில் காணப்படுவதால் 'ஒப்பல்' அகழ்வுப்பணிகளில் ஈடுபடுவோர் நிலத்திற்கு அடியிலுள்ள பாதாளப் பகுதிகளிலேயே வசித்து வருகின்றனர். ஏனெனில், நிலத்திற்கு மேல் பகுதியில் வசிப்பது என்பது மிகவும் கடினமானதாகும்.

## நான் தான் கண்டுபிடித்தேன்!

2003 ஆம் ஆண்டு ஜோன் டன்ஸ்டன் என்பவரினாலேயே இந்த 'ஒப்பல்' கண்டுபிடிக்கப்பட்டது. இவர் அவுஸ்திரேலியாவின் ஒப்பல் அகழ்வுப்பகுதியின் உரிமையாளராவார். 'ஒப்பல்' பற்றி குறிப்பிட்டுள்ள இவர் அதனை சுத்தப்படுத்திய பின்பே அதன் உண்மையான நிறம் தெரியவந்ததாகவும், தனது வாழ்நாளில் கண்ட சிறந்த ஒப்பல் கல் இதுவென சுட்டிக்காட்டி உள்ளார்.

## ஒப்பல் கண்காட்சி

அவுஸ்திரேலியாவில் ஒப்பல் கல் அகழும் வரலாற்றுக்கு 100 ஆண்டுகள் கடப்பதனை முன்னிட்டு நடைபெற்று வருகின்ற கண்காட்சியிலேயே இந்த 'ஒப்பல்' கல் பிரதானமான காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. கடந்த செப்டெம்பர் 25 ஆம் திகதி இந்த கண்காட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 2016 பெப்ரவரி மாதம் வரை இக்கண்காட்சி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகவும் பெரிதானதும் பெறுமதி மிக்கதுமான ஒப்பல் மாணிக்கமாக கருதப்படுவது 'ஒலிம்பிக் ஒஸ்ட்ராலிஸ்' ஒப்பல் என்று பெயர் சூட்டப்பட்டுள்ள மாணிக்கமேயாகும். இதனை 1956 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது க்ண்டுபிடித்தனர். இந்த மாணிக்கம் 11 அங்குலம் நீளம் கொண்டது. 4 அங்குலம் திணிவினைக் கொண்டது. இதன் பெறுமதி 250 மில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகம் என்று கூறப்படுகின்றது.



ஒலிம்பிக் ஒஸ்ட்ராலிஸ் ஒப்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா...?

வாகனங்களுக்கு பெற்றோல், டீசல் என்பனவற்றை எரிபொருளாகப் பயன்படுத்துவதைவிட, ஐதரசன் வாயுவினை எரிபொருளாகப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது என்ற கருத்து நிலவுகின்றது. அது ஏன்?




✱ வாகனங்களில் எரிபொருளாக பயன்படுத்தப்படும் பெற்றோலும் டீசலும் தகனம் அடையும்போது வெளியேற்றும் காபனீரொட்சைட் வாயுவின் காரணமாக, வளிமண்டலம் வெப்பமடைகின்றது. ஆனால், ஐதரசன் தகனத்தின்போது, நீராவியே வெளியேறுகின்றது. அதுவும் திரவ நிலையாகவே சென்றடைகின்றது. மாறாக, பெற்றோல் தகனத்தின்போது வெளியாகும் புகை மற்றும் கரி என்பன, ஐதரசன் தகனத்தின்போது ஏற்படுவதில்லை. இதனால் காற்று அசுத்தமடைவதும் இல்லை. எனினும், ஐதரசன் உற்பத்திக்கு நீரை இலத்திரனியல் ரீதியில் ஆவியாக்கல் நிலைக்குட்படுத்த வேண்டியுள்ளது. இதனால், ஐதரசன் வாயுவை சேமிப்பதற்கு அதிக செலவினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



வேகமாக சைக்கிளைச் செலுத்தும்போது, அதனை செலுத்துவோர் பெரும்பாலும் தமது உடலின் மேற்பாகத்தினை சற்று முன்நோக்கி வைத்துக் கொண்டு செலுத்துவதனைக் காணக் கூடியதாக இருக்கும். இதன் காரணம் என்ன?

★ வேகமாக செல்லும்போது, காற்று எமது உடலில் மோதுவதனை நீங்கள் அறிவீர்கள். பயணத்தின் வேகத்தினை அதிகரிக்கும்போது, இவ்வாறு காற்று மோதும் வேகமும் அதிகரிப்பதனைக் காணமுடியும். இந்த வளிமண்டல செயற்பாடானது, காற்று எதிர்த்தாக்கம் எனப்படுகின்றது. சைக்கிளை வேகமாக ஓட்டிச் செல்லும்போது, சைக்கிள் ஓட்டுனரை நோக்கிய காற்றின் எதிர்த்தாக்கமும் அதிகரிக்கின்றது. உடலின் மேற்பாகத்தினை நேராக வைத்துக் கொண்டு சைக்கிளை வேகமாக செலுத்தும்போது, பயண வேகமும் குறைவடைகின்றது. அத்துடன், வேகத்தினை அதிகரிப்பதற்கு ஓட்டுனர் அதிக சக்தியினை விரயமாக்கவும் நேரிடும். எனவேதான், காற்றின் எதிர்த்தாக்கத்தினைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்வதற்காக உடலை சற்று முன்நோக்கி வளைத்துக்கொண்டு சைக்கிளை செலுத்த நேர்கின்றது.





உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers
helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror
www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெயர் வந்த விதமும் எமக்குரிய உறவும்



மலேசிய மற்றும் இந்தோனேஷிய மொழிகளில் 'ஒரங்' என்றால் மனிதன் என்றும், 'ஹுட்டான்' என்றால் காடு அல்லது வனாந்தரம் என்று பொருள்படுகின்றது. இதனடிப்படையிலேயே அவற்றை 'காட்டின் மனிதன்' என அழைக்கின்றனர். சிம்பன்ச்சிகள், கொரில்லா போன்ற வானரங்களிடையே பெரிய வானரக் குடும்ப உறுப்பினமாக கருதப்படும் ஒரங்குட்டான்கள், மனிதனின் மிக நெருங்கிய உறவினமாகவும் கருதப்படுகின்றன. அதற்கமைய, மனிதனின் DNA களில் 98 சதவீதமானவை இதற்கும் உண்டு. தவிர, புதைபடிம ஆய்வுகள் மூலமாக, இவை மனிதருக்கு மிக நெருக்கமானவை என்றும் தெரியவந்துள்ளது.

## நடமாடும் இடங்கள்

*இவற்றை பெரும்பாலும் மலைப்பாங்கான பிரதேசங்களிலும் பள்ளத்தாக்குடன்கூடிய புதர்கள் நிறைந்த சூழலிலுமே காணலாம். ஒரங்குட்டான்களில் ஒருவகையான, சுமாத்ரன் ஒரங்குட்டான்களை 4,291 அடி அதாவது 1,500 மீற்றர் உயரமான மலைகள் மற்றும் மலை உச்சிகளில் காண மற்றுமொரு வகையான போர்னியோ ஒரங்குட்டான் மீற்றருக்கு குறைவான இடங்களில் காணலாம். தவிர புல்வெளிகள், பயிர் நிலங்கள், காடுகள், ஆழமற்ற நீ போன்ற இடங்களிலும் இவற்றின் நடமாட்டத்தை காணலாம்.*

# காட்டின் ம

# பற்றி அறி

**'ஒரங்குட்டான்' (Orangutan) என்பது செந்நிற ரோமத்தால் மூடப்பட்ட ஒரு விலங்கினமாகும். இது பெரிய வாலில்லாக் குரங்கு குடும்பத்தின் ஓர் இனமாகும். இந்தோனேஷியா மற்றும் மலேசியாவுக்கு மாத்திரமே உரித்தான இந்த குரங்கினத்தை, தற்பொழுது போர்னியோ மற்றும் சுமாத்ரா தீவுகளில் உள்ள மழைக்காடுகளில் மட்டுமே காணமுடியும்.**



பெரிய வானரங்களில் மரங்களுக்கிடையில் வாழும் ஒரு வானரப் பிரிவே இந்த ஒரங்குட்டான் ஆகும். ஆண் மற்றும் பெண் ஒரங்குட்டான்கள் உடல் அளவில் மாறுபட்டுக் காணப்படும். பெரிய வானர இனங்களிலேயே, தனித்து வாழ விருப்பம் கொண்ட ஒரு வானர இனம் இது என விலங்கின நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். தாயும் குட்டியும் மூன்று வருடங்கள் மாத்திரமே சேர்ந்து வாழும். அத்தோடு, மிகவும் புத்திக்கூர்மையுள்ள விலங்கினமாகவும் இது கருதப்படுகின்றது.

## உணவு

இவற்றின் உணவு வகையில் 65 முதல் 90 வீதமானவை பழவகைகளாகும். பள்ளத்தாக்குடன்கூடிய சதுப்பு நிலங்களில் வாழ ஒரங்குட்டான்கள் மிகவும் விரும்புகின்றன. தமக்கு தேவையான பழங்கள் அப்பகுதிகளில் கிடைப்பதே அங்கு வாழ விரும்புவதற்கான காரணமாகும். போர்னியோ ஒரங்குட்டான்கள் 317 வகையான மாறுபட்ட உணவுவகைகளை தமது உணவில் சேர்த்துக்கொள்கின்றன. அவற்றில் இலைவகைகள், தளிர்,



மரப்பட்டை, வண்டுகள், தேன், பறவைகளின் முட்டைகள் என்பனவும் அடங்கும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஒரங்குட்டான்களின் இனப்பெருக்கம் நிகழ்வதும் பழங்கள் காய்த்துப் பழுக்கும் காலங்களிலாகும்.

பழங்கள் குறைவாகக் கிடைக்கும் காலத்தில் இலைகள், சிறு கிளைகள், குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள் என்பனவற்றை உண்ணும். மேலும் ஒரங்குட்டான்கள் மண் வகைகளையும் கற்களையும்கூட உண்கின்றன. தமக்கு



தேவையான கனியுப்புக்களை வழங்குவதாலும், கிருமிகளை அழிக்கும் கிருமிநாசினியாக செயல்படுவதனாலும், வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கு நிவாரணியாக செயல்படுகின்றமையினாலுமே இவ்வாறு மண், கற்களை அவை உண்கின்றன.

## நடத்தைகள்

பெரிய வகை வானரங்களில் சமூகமாக கூடி வாழப் பெரிதும் விரும்பாத வானர இனமாக ஒரங்குட்டான்கள் கருதப்படுகின்றன. இவை



தனிமையாக வாழவே அதிகம் விரும்புகின்றன. ஆனால், வயது வந்த பெண் ஒரங்குட்டான்களும் அவற்றில் தங்கிவாழும் ஏனையவையும் பால் குடிக்கும் குட்டிகளும் கூட்டமாக திரிவதுண்டு. இந்த தாய்-சேய் பிணைப்பு குட்டி பிறந்து மூன்று வருடங்களுக்கு மாத்திரமே நீடிக்கும். அதன்பின் குட்டி தனியாக வாழ ஆரம்பிக்கும். வயது வந்த ஆண் ஒரங்குட்டான்கள் எப்போதும் சுதந்திரமாகவே வாழும்.

ஒரங்குட்டான்க
அதிகாலையில் 2
மணித்தியாலங்கள
தேடுவதற்கும் குட்
உணவு ஊட்டுவத
செலவழிக்கின்றன
வேளையில் ஓய்
இவற்றின் முக்கிய
ஆகும். னைய
சிறுத்தைகள், காட்
மற்றும் முதலைக
குறிப்பிடலாம். ஒ
அழிவை எதிர்நோ
உயிரினம் என்பது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA






ம் மலை உச்சிகளில் காணலாம்.
பார்னியோ ஒரங்குட்டான்களை 1,000
டங்களில் காணலாம். தவிர;
கள், காடுகள், ஆழமற்ற நீர்நிலைகள்
வற்றின் நடமாட்டத்தை

## வகைப்பாடு

ஆங்கிலப் பெயர் - Orangutan
திணை - விலங்கினம்
தொகுதி - முதுகுநாணி
வகுப்பு - பாலூட்டி
வரிசை - முதனி
குடும்பம் - ஹொமினிடே
துணைக்குடும்பம் - பொன்கினே (Ponginae)
பேரினம் - Pongo



# மனிதன்

# அறிவீர்களா?

ஒரங்குட்டான்கள் அதிகாலையில் 2 முதல் 3 மணித்தியாலங்களை உணவு தேடுவதற்கும் குட்டிகளுக்கு உணவு ஊட்டுவதற்கும் செலவழிக்கின்றன. பகல் வேளையில் ஓய்வெடுக்கும். இவற்றின் முக்கிய எதிரி புலிகள் ஆகும். [illegible]னய எதிரிகளாக சிறுத்தைகள், காட்டு நாய்கள் மற்றும் முதலைகளைக் குறிப்பிடலாம். ஒரங்குட்டான்கள் அழிவை எதிர்நோக்கியுள்ள ஓர் உயிரினம் என்பதால், செந்தரவு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. கடதாசி உற்பத்திக்காகவும் பாம் எண்ணெய் கைத்தொழிலுக்காகவும் பெருமளவு மரங்கள் வெட்டப்படுவதே இவை அழிவடைந்து வருவதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகின்றது.

## புத்திக்கூர்மை

இவை புத்திக்கூர்மை மிகுந்த விலங்கினமாகும். அவதானிப்புகள் மூலம் கற்றுக்கொள்வதில் இவை திறமை வாய்ந்தவை. பல சந்தர்ப்பங்களில் மிருகக்காட்சி சாலைகளில் இருந்து ஒரங்குட்டான்கள் தப்பி ஓடுவதும் இவ்வாறான அவதானிப்புமூலம் கற்றுக்கொள்ளும் திறமையினாலாகும். அதாவது, கூட்டை சுத்தமாக்குவதற்கும் உணவு வழங்குவதற்கும் வரும் ஊழியர்கள், பூட்டைத் திறந்து உள்ளே வரும் விதத்தை நன்கு அவதானித்துக்கொண்டிருக்கும் இவை, பின்னர் அந்த முறையைப் பின்பற்றி பூட்டைத் திறந்து தப்பிச் செல்லும். 2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி, வேறுபாட்டினை அறிந்துகொள்ளும் ஆற்றல் இவற்றுக்கு இருப்பதாக தெரியவந்துள்ளது. மனிதனைத் தவிர இத்தகைய ஆற்றல் உள்ள ஒரே ஒரு விலங்கினம் ஒரங்குட்டான்கள் ஆகும் எனக் கருதப்படுகின்றது.

## கூடு கட்டுதல்

ஒரங்குட்டான்கள் கூடு கட்டுவதில் திறமை வாய்ந்தவை. இவை இரவு மற்றும் பகல் என இரு வேளைகளையும் கழிப்பதற்காக கூடுகளைப் பயன்படுத்துகின்றன. இதனை மிகவும் கவனமாகவும் பாதுகாப்பாகவும் இவை மேற்கொள்ளும். இளம் குட்டிகள் தமது தாயை அவதானிப்பதன் மூலம் இதனை கற்றுக்கொள்கின்றன. குட்டிகளின் வயது ஆறுமாதங்களாக இருக்கும்போதே, கூடுகட்டும் முறையை அவதானிப்பதன் மூலம் அவை கற்க ஆரம்பிக்கின்றன. அதன்படி, ஐந்து அல்லது ஆறு நிமிடங்களில் கூட்டினைக் கட்டி முடிக்கும் ஆற்றல் அவற்றிடம் உள்ளன.

## மருந்து

மருந்துகள் குறித்து ஒரங்குட்டான்களுக்கு மிகுந்த அறிவுண்டு. அவை இயற்கையான தாவர மூலிகைகளையும் கற்களையும் மருந்துகளாகப் பயன்படுத்தும். கொமெலினா எனும் தாவரத்தின் மலரை நசித்து அதன் சாரை தமது தோல் நோய்களுக்காக உடலில் பூசிக்கொள்ளும் அளவிற்கு மருந்துகள் பற்றிய அறிவை அவை பெற்றுள்ளன. இந்த மருந்தை எவ்வாறு தயாரிப்பது என பரம்பரை பரம்பரையாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு ஒரங்குட்டான்களால் கற்றுக் கொடுக்கப்படுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்முதலில் உலகை வலம் வந்த ஃபேர்டினன்ட் மகலன்




உலகின் புகழ்பெற்ற நாடுகாண் பயணிகளில் ஃபேர்டினன்ட் மகலனுக்கு தனி இடமுண்டு. ஏனெனில், உலகை முதன்முதலில் சுற்றி வந்த நாடுகாண் பயணியாக இவரே திகழ்கின்றார். அத்தோடு, பசுபிக் சமுத்திரத்தைக் கடந்த முதலாவது ஐரோப்பியர் என்ற பெருமையும் இவருக்கே உண்டு. பசுபிக் சமுத்திரத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் இணைக்கும் நீரிணையைக் கண்டு பிடித்தவரும் இவரே ஆவார்.

## பிள்ளைப்பருவம்

ஃபேர்டினன்ட் மகலன் பிறப்பால் போர்த்துக்கேயராவார். கி.பி. 1480 இல் போர்த்துக்கல்லின் 'சப்ரோஸா' எனும் மலையக கிராமத்தில் ஏழ்மையான குடும்பம் ஒன்றில் பிறந்தார். இவர் சிறு வயதிலேயே தனது பெற்றோரை இழந்தார். காலப்போக்கில் போர்த்துக்கல் மன்னரின் மாளிகையில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அங்கு அடிப்படைக் கல்வியைப் பெற்றுக்கொண்டார். பின்னர் புவியியல் மற்றும் வானியல் குறித்து விசேட கவனத்தைச் செலுத்தினார். மேலும், சிறு வயது முதல் கடல் பயணங்களில் ஆர்வம் கொண்டிருந்தார்.

## மகலனின் முதலாவது கடல் பயணம்

கடல் பயணங்கள் குறித்து மகலனிடம் காணப்பட்ட அறிவு அவரது முதலாவது கடல் பயணத்திற்கு பெரிதும் உதவியது. மகலன் தனது முதலாவது கடல் பயணத்தை 1505 இல் தமது இருபதாவது வயதில் ஆரம்பித்தார். அது இந்தியாவை நோக்கிய பயணமாக இருந்தது. அப்பொழுது போர்த்துக்கேயரான பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா இந்தியாவில் இருந்தார். அவருக்கு உதவும் பொருட்டே மகலன் அங்கு சென்றார். மகலன் இந்தியாவில் கண்ணூர் எனும் பிரதேசத்தில் தரை இறங்கியதும் அங்குள்ள சுதேசிகளுடனான போருக்கு அவர் முகம்கொடுக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது.






## மலேசியாவைக் கண்டுபிடித்தல்

மகலன் பல வருடங்களாக கிழக்கு ஆபிரிக்கக் கடலில் ஆய்வுகளில் ஈடுபட்டார். அந்த ஆய்வுகளின் பயனாக, மலேசியாவைக் கண்டுபிடித்தார். போர்த்துக்கல்லில் இருந்து மேற்குத் திசையில் பயணித்தால் வாசனைத் திரவியங்கள் நிறைந்த தீவுகளைக் கண்டுபிடிக்கலாம் என அவர் நம்பினார்.

## அரசின் அனுமதி

தனது நோக்கத்தை சாதிப்பதற்காக தேவையான உதவிகளை பெறும் பொருட்டு தாய்நாடு திரும்பினார் மகலன். தனது பயணத்திற்கு உதவும்படி மன்னனிடம் கேட்டார். எனினும், மகலன் எதிர்பார்த்த உதவி மன்னரிடம் இருந்து கிடைக்கவில்லை. இதனால் அவர் பின்னடையவுமில்லை. உடனே ஸ்பெய்னுக்குச் சென்ற மகலன், இஸபெல்லா அரசியின் பேரனாகிய இளவரசர் சார்ள்ஸிடம் உதவி கோரினார். அவர் தனது பூரண சம்மதத்தை தெரிவித்ததோடு, உதவிகளையும் வழங்கினார். இளவரசர் சார்ள்ஸின் உதவிகளோடு மகலன் ஐந்து கப்பல்களில் 250 இற்கும் மேற்பட்ட உதவியாளர்களைக் கொண்ட குழுவுடன் உலகைச் சுற்றி வரும் பயணத்தை ஆரம்பித்தார்.

## துயரம் மிகுந்த பயணம்

மகலனின் உலகைச் சுற்றி வரும் பயணத்தின்போது அவரும் அவரது குழுவினரும் கப்பல்களில் ஏறி கடல் அலைகளோடு போராடி பெரும் சிரமங்களையும் துன்பங்களையும் எதிர்கொண்டு முதன்முதலாக தென் அமெரிக்காவின் பிறேசிலை அடைந்தனர். பின்னர் அங்கிருந்து தெற்கு நோக்கிப் பயணித்தனர். அது கடுங்குளிர் காலம் ஆகும். கடுங்குளிருக்கு முகம் கொடுக்க முடியாத அவர்கள் பட்டகோனியா (இன்றைய ஆர்ஜன்டீனா) என அழைக்கப்படும் நாட்டைச் சென்றடைந்தனர்.



## நீரிணை கண்டுபிடிப்பு

குளிர் பருவம் முடிவடையும் வரை காத்திருந்த மகலன் குழுவினர், தமது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மீண்டும் பயணத்தை ஆரம்பித்தனர். சுமார் ஒரு வருடம் பயணித்தபின் ஒரு நீரிணையை அடைந்தனர். அதுவே 'மகலன் நீரிணை' ஆகும்.


## பிலிப்பைன்ஸில் தரையிறங்கல்

நீண்ட பயணத்தின் பின்னர் மகலன் குழுவினர் மற்றொரு தீவுக் கூட்டத்தில் காலடி வைத்தனர். அதுதான் பிலிப்பைன்ஸ் ஆகும். அங்கு அவர்கள் சிறிது காலம் தங்கி இருந்தனர். அப்போதளவில் மகலன் குழுவினரில் பலரும் கடுங்குளிருக்குத் தாக்குப் பிடிக்க முடியாத காரணத்தால் நோய்களால் பீடிக்கப்பட்டு உயிரிழந்திருந்தனர். அவர்களின் கப்பல்களில் சிலவும் அழிவுக்குள்ளாகி இருந்தன.

## மகலனின் மறைவு

பிலிப்பைன்ஸில் மகலன் குழுவினருக்கும் வேறொரு குழுவினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அந்த மோதல் வலுவடைந்து, இறுதியில் ஃபேர்டினன்ட் மகலன் அம்மோதலில் கொல்லப்பட்டார்.

(அ)


மகலனின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாமிக்கும் மாலாவுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මාලා: **ආයුබෝවන් නැන්දේ.**
ஆயுபோவன் நெந்தே.
மாலா: **வணக்கம் மாமி.**

නැන්දා: **ආ.. මාලා! ඇතුළට එන්න දුව, වාඩිවෙන්න.**
ஆ... மாலா! எதுளட்ட என்ன துவ, வாடிவென்ன.
மாமி: **ஆ... மாலா! உள்ளே வாங்க மகள், உட்காருங்கள்.**

මාලා: **ස්තුතියි නැන්දේ. කෝ රාණි? කෝ නංගි?**
ஸ்தூதிய் நெந்தே. கோ ராணி? கோ நங்கி?.
மாலா: **நன்றி மாமி. ராணி எங்கே? தங்கச்சி எங்கே?**

නැන්දා: **එයාලා ආච්චිලගේ ගෙදර ගියා. දැන් එයි.**
எயாலா ஆச்சிலகே கெதற கியா. தென் எய்.
மாமி: **அவர்கள் பாட்டி வீட்டுக்குப் போனார்கள். இப்போது வந்துவிடுவார்கள்.**

මාලා: **එයාලා කොයි වෙලෙද ගියේ?**
எயாலா கொய் வெலெத கியே?
மாலா: **அவர்கள் எப்போது போனார்கள்?**

නැන්දා: **උදේ ගියේ දුව.**
உதே கியே துவே.
மாமி: **காலையில் போனார்கள் மகள்.**

මාලා: **හදිසියේම ගියේ ඇයි නැන්දේ?**
ஹதிசியேம கியே எய் நெந்தே?
மாலா: **திடீரென்று ஏன் போனார்கள் மாமி?**

නැන්දා: **ආච්චිට ටිකක් සනීප නැහැ කිව්වා දුව.**
ஆச்சிட்ட டிக்கக் சனீப நெஹெ கிவ்வா துவ.
மாமி: **பாட்டிக்குக் கொஞ்சம் சுகம் இல்லை என்றார்கள் மகள்.**

**ආච්චිට ප්‍රෙෂර් වැඩිවෙලා. ඉතින් එයාලා බලලා එන්න ගියා.**
ஆச்சிட்ட ப்ரெஷர் வெடிவெலா. இதின் எயாலா பலலா என்ன கியா.
**பாட்டிக்கு 'ப்ரெஷர்' கூடிவிட்டதாம். அதனால், அவர்கள் பார்க்கப் போனார்கள்.**

මාලා: **ඇත්තද? එහෙනම් මම ගිහින් හෙට එන්නම්.**
எத்தத? எஹெனம் மம கிஹின் ஹெட்ட என்னம்.
மாலா: **உண்மையா? அப்படியென்றால் நான் போய் நாளை வருகிறேன்.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .............. එන්න දුව.
2. ආච්චිලගේ ......... ගියා.
3. හදිසියේම ......... ඇයි?




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**Because** எனும் இணைக்கும் சொல்லைக் (Joining word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ள கலப்பு வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) He could not go to school yesterday.
அவனால் நேற்று பாடசாலைக்குப் போக முடியவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஆ) It was raining heavily.
மழை கடுமையாகப் பெய்துகொண்டு இருந்தது.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ He couldn't go to school yesterday because it was raining heavily.
மழை கடுமையாகப் பெய்துகொண்டு இருந்ததால், அவனால் நேற்று பாடசாலைக்குப் போக முடியவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

✱———✱———✱———✱

இ) I trust his word.
நான் அவனுடைய வார்த்தையை நம்புகிறேன்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஈ) He is very honest.
அவன் மிகவும் நேர்மையானவன் ஆவான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ I trust his word because he is honest.
நான் அவனுடைய வார்த்தையை நம்புகிறேன். ஏனெனில், அவன் மிகவும் நேர்மையானவன் ஆவான்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

✱———✱———✱———✱

உ) Kamalan failed the examination.
கமலன் பரீட்சையில் சித்திபெறவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஊ) He did not study hard.
அவன் கடுமையாகப் படிக்கவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ Kamalan failed the examination because he did not study hard.
கமலன் கடுமையாகப் படிக்காததால், பரீட்சையில் சித்திபெறவில்லை.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

✱———✱———✱———✱

எ) I could not lift that parcel.
என்னால் அந்தப் பொதியைத் தூக்க முடியவில்லை.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஏ) It was too heavy.
அது மிகவும் பாரமாக இருந்தது.
(தனி வாக்கியம்-Simple Sentence)

✱ I could not lift that parcel because it was too heavy.
என்னால் அந்தப் பொதியைத் தூக்க முடியவில்லை. ஏனெனில், அது மிகவும் பாரமாக இருந்தது.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

**குறிப்பு:** could not என்பதன் சுருக்கம் couldn't என்பதாகும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை - மே.இ.தீவுகள் மோதும்

விஜய் ஸ்போர்ட்ஸ்

# சோபர்ஸ் - திசேரா

# கிண்ணப் போட்டிகள்



இலங்கையில் தற்போது நடைபெற்று வருகின்ற இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கு இந்த வருடத்திலிருந்து 'சோபர்ஸ்-திசேரா' கிண்ணம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

உலகப் புகழ் சகலதுறை ஆட்டக்காரரான சேர்.காஃபீல்ட் சோபர்ஸ் மற்றும் இலங்கைக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைப்பதற்கு முன்னர் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற சிறந்தவொரு தலைவராகவும் கருதப்படுகின்ற மைக்கல் திசேரா ஆகிய இரண்டு பேரையும் கௌரவிக்கு முகமாகவே இவ்வாறு 'சோபர்ஸ்' - 'திசேரா' கிண்ணம் என்று பெயரிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1939 மார்ச் 23 ஆம் திகதி பிறந்த மைக்கல் திசேரா





கல்கிசை புனித தோமஸ் கல்லூரி மாணவராவார். கல்லூரி அணியிலிருந்து பின்னர் சீ.சீ.சீ. கழகத்திற்கு விளையாடி, தொடர்ந்து என்.சீ.சீ. கழகத்திற்காகவும் விளையாடிய திசேரா பின்னர் இலங்கை அணியில் இணைந்ததுடன், இலங்கைக்கு முதலாவது உத்தியோகப் பற்றற்ற டெஸ்ட் வெற்றியை பெற்றுக் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1964 இல் இலங்கைக்கு வருகை தந்த இம்தியா எடம்ஸ் தலைமையிலான பாகிஸ்தான் அணியை தோற்கடித்தே இந்த வெற்றியை இலங்கை அணி பெற்றது. இதன் பின்னர் திசேரா 1975 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணப் போட்டிகளில் மூன்று போட்டிகளில் கலந்துகொண்டுவிட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

### சோபர்ஸ்

உலகப் புகழ் சோபர்ஸ்ஸை எடுத்துக்கொண்டால் 93 டெஸ்ட் போட்டிகளில் 8,032 ஓட்டங்களைப் பெற்று உலகிலேயே கூடிய டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றவர் என்ற சாதனையை 1980 ஆம் ஆண்டுகள்வரை தனதாக்கிக்கொண்டிருந்தவராவார். அதேபோல் இடது கை சுழல்பந்து வீச்சாளராகவும், மிதமான வேகப்பந்து வீச்சாளராகவும் இவர் 235 விக்கெட்களையும் பெற்றிருந்தார். சிறந்த களத் தடுப்பாளராகவும் மிளிர்ந்த சோபர்ஸ் 109 கெட்ச்களை பெற்றிருந்ததோடு, சிறந்தவொரு அணித் தலைவராகவ்ம் செயற்பாட்டவராவார். 1983 ஆம் ஆண்டில் இவர் இலங்கை அணியின் பயிற்றுனராகவும் கடமையாற்றியவராவார்.

## பயிற்சியாளராக வாஸ்



2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அபுதாபி சார்ஜா நகரில் நடைபெறவுள்ள 'பாகிஸ்தான் சுப்பர் லீக்' போட்டிகளில் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சமிந்த வாஸ் பந்துவீச்சு பயிற்சியாளராக கடமையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் சமிந்த வாஸ் உட்பட இன்னும் 15 பேர் பயிற்சியாளர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. சமிந்த வாஸ் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளராக பணியாற்றியிருந்தமையும் நினைவுகூரத்தக்கது.

## இலங்கை மே.இ.தீவுகள் போட்டி அட்டவணை




இலங்கை -மே.இந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டிகளில் முதலாவது கட்டப் போட்டி கடந்த 14 ஆம் திகதி தொடங்கி 18 ஆம் திகதி முடிவடைந்தது. இத்தொடர்களில் அடுத்துவரும் போட்டி விபரங்கள் வருமாறு;

இரண்டாம் டெஸ்ட் - ஒக்டோபர் 22 தொடக்கம் 26 வரை

**ஒருநாள் போட்டி:**

முதலாவது ஒருநாள் போட்டி - நொவெம்பர் 01 (ப/இ)
இரண்டாவது ஒருநாள் போட்டி - நொவெம்பர் 04 (ப/இ)
மூன்றாவது ஒருநாள் போட்டி - நொவெம்பர் 07 (ப/இ)

**டுவென்டி டுவென்டி:**

முதலாவது போட்டி - நொவெம்பர் 09 (இரவு 7 மணி)
இரண்டாவது போட்டி - நொவெம்பர் 12 (இரவு 7 மணி)

## மகளிர் கிரிக்கெட் தரப்படுத்தல் பட்டியல்



அண்மையில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட மகளிர் கிரிக்கெட் தரப்படுத்தல் பட்டியலின்படி இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி எட்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 134 புள்ளிகளைப் பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ள அதேவேளை, 124 புள்ளிகளுடன் இங்கிலாந்து மகளிர் அணி இரண்டாவது இடத்தையும், 109 புள்ளிகளுடன் நியூஸிலாந்து அணி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியா, மே.இ.தீவுகள், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், அயர்லாந்து ஆகிய அணிகள் முறையே ஏனைய இடங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்

# கண்டி சாரணர் பேரணி....!

கண்டி சாரணர் இயக்கத்தின் மாவட்ட சாரணர் பேரணி ஒக்டோபர் 2 ஆம் திகதி ஆரம்பமாகியது. மாவட்ட ஆணையாளர் சரத் பண்டார இந்த முகாம் செயற்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கையில்...

இம்முறை நடத்தப்படும் மாவட்ட முகாம் சாரணர்களின் வாழ்க்கைக்கும், மனதுக்கும் நெருக்கமாக அமையும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. வாழ்க்கைப் பயணத்தின் வெற்றிக்கு சாரணர் வாக்குறுதிகளை பின்பற்ற வேண்டிய விதம் குறித்து விழிப்புணர்வூட்டுவது எமது முயற்சியாகவும் அமைகின்றது எனவும் குறிப்பிட்டிருந்தார்.



## முகாமின் வடிவமைப்பு


மாவட்ட முகாம் நான்கு உப முகாம்களைக் கொண்டதாகவும். பொல்கொல்ல, விக்டோரியா, ரன்தெனிகல, ரன்டெம்ப உப முகாம்களின் சாரணர்கள் ஆயிரம் பேரளவில் முழுநேர முகாம் செயற்பாட்டாளர்களாக செயற்படக் கூடியதாகவும் அமைந்திருந்தது.

## விசேட சந்தர்ப்பங்கள்

கண்டி மாவட்ட சாரணர் இயக்கத்தின் நூற்றாண்டு வரலாற்று கதை நூலாக வெளியிடப்படவுள்ளது. அந்த நூலின் பெயர் 'கண்டி மாவட்டத்தின் பெருமை மிக்க சாரணர்கள்' என்பதாகும். மேலும் இலங்கையின் சாரணர்களுக்காக நடத்தப்படும் பல்லேகெல பயிற்சி சாரணர் முகாமினை சூழ 40 லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிப் பாதை மற்றும் பாதுகாப்பு வேலி ஆகியன இங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

# 'ஹெமொக்' ரக கட்டில்

மழை நாட்களில் முகாம் சுற்றாடல் சேறும் சகதியுமாக இருக்கும். கூடாரத்தினுள் உறங்குவது மிகக் கடினமாகவும் இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நிலத்திலிருந்து 3 அடி உயரத்தில் மிதக்கும் கட்டிலினை




உருவாக்கிக்கொள்ள முடியும். இதனை 'ஹெமொக்' ரக கட்டில் என்று கூறலாம். இங்கு காட்டப்பட்டுள்ளவாறு இதனை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இரண்டு மரங்களை தெரிவு செய்துகொள்ள வேண்டும். இந்த இரண்டு மரங்களுக்குமிடையேயான இடைவெளி பத்து அடிகளாக இருக்க வேண்டும். பலமான 'கென்வஸ்' துணி அல்லது 'சாக்கு' இதற்கு பொருத்தமானதாக அமையும். சாக்கின் இரண்டு முனைகளையும் குறித்த இரண்டு மரங்களுடன் இணைத்துக் கட்டுவதன்மூலம் இலகுவாக 'ஹெமொக்' கட்டிலினை தயாரித்துக்கொள்ள முடியும். அது போதுமானதாக அமையாவிடின், உங்கள் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் 'ஹெமொக்' ரக கட்டிலினை தேவைக்கு ஏற்றபடி அமைத்துக்கொள்ள முடியும்.

இதற்கென கயிற்று முடிச்சுகள் பிணைக்கப்பட்ட வலை போன்ற கென்வசினையும் பயன்படுத்த முடியும்.



மழையிலிருந்து பாதுகாப்புத் தரும் கூரையுடன் கூடிய கட்டிலினை இவ்வாறு தயாரித்துக்கொள்ள முடியும்.





குழுவாக உள்ள சாரணர்கள் [illegible] இவ்வாறு உருவாக்கிக்கொள்ளலாம்.




# யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரியின் உத்தியோகபூர்வ லட்சினை அறிமுகம்






இலங்கை சாரணர் அமைப்பின் ஒன்பதாவது தேசிய சாரணர் ஜம்போரி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. இதனை முன்னிட்டு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்படி ஜம்போரி தொடர்பான உத்தியோகபூர்வ இலட்சினை வெளியிடப்பட்டது. கல்வி[illegible]றை அமைச்சர் அக்கில விராஜ் காரியவசம் மற்றும் சாரணர் இயக்க தலைமையகத்தின் அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.


FRIENDSHIP & UNDERSTANDING
February 20-26
9TH NATIONAL SCOUT JAMBOREE
JAFFNA-SRI LANKA-2016





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.159



### மேலிருந்து கீழ்

01. இலங்கையின் தேசிய வனமொன்று.
02. நடந்து செல்லும் யாத்திரை. (குழம்பியுள்ளது)
04. பூனை பிடிக்கும்.
05. 'நில்' என்பதன் எதிர்ச்சொல்.
07. முருகனின் மற்றொரு பெயர். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்


01. இலங்கையின் வட மாகாண தலைநகரம்.
03. கட்டட வேலை செய்பவன்.
04. நல்லெண்ணெய் பெறப்படும் தானியம்.
05. சிவபெருமானின் வாகனமாகக் கருதப்படுவது. (குழம்பியுள்ளது)
06. இங்கு சென்றால் மணல் வீடு கட்டி விளையாடலாம். (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.158 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | க் | க | ன் | | 2 தே |
| ல | | ழ் | 3 கூ | | ர் |
| வு | ல | 4 நி | | 5 சி | |
| | | 6 கா | வ | ல | ன் |
| 7 ப | கை | ல | | | ழ |
| டை | | ம் | | பை | 8 சோ |




கூட்டுத்தொகையை இலக்கத்தில் தருக




வேறுபட்டதில் X அடையாளமிடுக




படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை வைத்து கட்டங்களைப் பூர்த்தி செய்க

மேலிருந்து கீழ்    மேலிருந்து கீழ்



சிவப்புக் கட்டங்களுக் குள் வரும் புதிய சொல்

எழுத்துக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிறங்களுக்கமைய படத்தில் நிறந்தீட்டுக





## அறிவுக்கு விருந்து (07.10.2015) விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) ARROW | 02) HAMMER | 03) MITTEN | 04) BOWLING PIN |
| 05) SOCK | 06) KITE | 07) BALLOON | 08) SMOKING PIPE |
| 09) HEART | 10) CAR | 11) FLOWER | 12) PINE TREE |
| 13) TEACUP | 14) FISH | 15) H | 16) QUESTION MARK |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

தேசிய ரீதியான மாவட்டங்களுக்கு இடையிலான கிரீடா சக்தி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி, மன்னார் மாவட்ட அணியை இறுதிப்போட்டியில் 2-0 என்ற கணக்கில் வெற்றி கொண்டது.

இந்த சுற்றுப்போட்டியில் காத்தான்குடி சார்பாக 3 வீரர்களும், ஏறாவூர் சார்பாக 6 வீரர்களும், ஓட்டமாவடி சார்பாக 3 வீரர்களும், மட்டக்களப்பு சார்பாக 3 வீரர்களும் கலந்துகொண்டனர். இந்த வீரர்களுக்கான பயிற்சிகளை மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் எம்.வை. ஆதம்லெவ்வை மற்றும் உதவி பயிற்றுவிப்பாளர் எ.எம்.றிவாஸ் ஆகியோர் வழங்கியிருந்தார்கள். (ஜுனைட் எம்.பஹ்த்)

## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



த.யோர்த்திக்கா,
புனித அந்தோனியார் ம.ம.வித்.,
கொழும்பு.



கு.உதயகுமார்,
இ/எம்பி. மாதம்பை இல; 2
த.வித்., இறக்குவானை.



பா.பாவரசன்,
கிளி/நல்லூர் மகா வித்.,
சாமிப்புலம்.



ஜெ.சுதர்ஷினி,
ஹோல்புறுக் விஞ்ஞானக் கல்லூரி,
அக்கரைப்பத்தனை.






எஸ்.சபிஷன்,
தலவாக்கலை த.ம.வித்., தலவாக்கலை.




எ.ஃப். மிர்ஹா,
சம்மந்தனுவ கனிஷ்ட வித்.,
ஆண்டிகம.



எஃப்.அஸ்ரினா,
அல்-பஹ்ரியா ம.கல்லூரி,
பாணந்துறை.

எம்.சகீல்,
கொரகொட மு.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.




எம்.உமர்,
அல்-மஹ்மூத் வித்., மல்வானை.



பி.கிருஸ்ணகுமார்,
கல்லுள்ள தோட்டம், மடுல்சீமை.



நா.கோபிதன்,
பிறமண்டு வித்., தண்டிக்குளம்.



ஜெ.அருளாஷ்,
விபுலானந்தாக் கல்., வவுனியா.



ஆர்.கிருஷாந்தன்,
ப/யூலறாவ த.வித்., வெல்லிமடை.

# உலகில் ஆபத்தான உயிரினங்களில் ஒன்று...





உலகில் ஆபத்தான உயிரினங்கள் பல உள்ளன. இவற்றில் பல கொடிய விஷங்களை தம்மகம் கொண்டுள்ளன. எனினும், விஷத்தை தம்மகம் கொண்டிருக்காமல் அதிகளவு மனித உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் மிக ஆபத்தான உயிரினமாக நுளம்பே உள்ளது. இலகுவில் அழிக்க முடியாததும் பல நாடுகளுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் உயிரினமாகவும் இது கருதப்படுகின்றது.

டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா, யானைக்கால் நோய் என்பவற்றை மிக வேகமாகப் பரப்பி அதிகளவு உயிரிழப்பை ஏற்படுத்தும் மிக ஆபத்தான ஆற்றலையும் இவை கொண்டுள்ளன. அந்தவகையில்; உலகில் உள்ள 720 கோடி மக்கள் தொகையில் நுளம்புகள் பரப்பும் நோய்களால் வருடம் ஒன்றுக்கு சுமார் 7,25,000 பேர் வரை மரணிக்கின்றனர். இத்தொகையில் மலேரியாவால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 6,00,000 ஆக உள்ளது. இதில் 3,67,000 பேர் ஆபிரிக்க நாடுகளில் மரணிக்கின்றனர். இவற்றில் 70% ஆனோர் ஆபிரிக்க சிறுவர்களாகவே உள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத்தகைய உயிரிழப்புகளுக்கு காரணமாகும் நுளம்புகளை அழிப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் இரசாயனங்களுக்கு எதிராக அவை இயைபாக்கம் அடைந்து வருவதும் சிக்கலுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* பிரடரிக் நோத் ஆள்பதியின் காலத்தில் நடந்த முக்கியமான வரலாற்று நிகழ்வு என்ன?

  இலங்கை பிரித்தானியா வசம் இருந்தபோது கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்து அவர் படுதோல்வி அடைந்தார்.

* உலகிற்கு அடிப்படை மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய நாடு எது?

  ஐக்கிய அமெரிக்கா




* உலகில் மக்கள் வாழ உகந்த நாடுகளின் தரவரிசையில் (2015) முதல் நான்கு இடங்களை பெறும் நாடுகள் எவை?

  i. சுவிட்சர்லாந்து ii. சிங்கப்பூர்
  iii. ஸ்பெயின் iv. ஜப்பான்

* விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?

  கலிலியோ கலிலி



* சர்வதேச வங்கியில் இலங்கை எப்போது இணைந்துகொண்டது?

  1950.08.24 இல்

* ATM என்பதன் விரிவாக்கம் என்ன?

  Automated Teller Machine



* தேசிய சின்னம் எப்போதுமுதல் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது?

  1972 முதல்

* இலங்கை நாடாளுமன்றத்தில் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் யார்?

  கலாநிதி என்.எம்.பெரேரா



* ஐக்கிய இராச்சியத்தின் தேசிய கீதத்தின் முதல் வரிகள் என்ன?

  God Save the Queen...

தெகுப்பு: உடுவை பரந்தாமன்

# உலகில் பிரபல்யமானவர்கள்

## அகதா கிறிஸ்ரி

மர்மமும் திகிலும் நிறைந்த நாவல்களை எழுதி வாசகர்களின் பாராட்டையும், வரவேற்பையும் பெற்ற நாவலாசிரியர்களில் சென்ற நூற்றாண்டில் பிரபல்யமாக விளங்கியவர்தான் அகதா கிரிஸ்டி ஆவார். அரை நூற்றாண்டிற்கு மேலாக கற்பனை நாவல்களில் அரசியாக அவர் செல்வாக்குப் பெற்று வந்தார்.



அகதா கிறிஸ்ரி 1891 இல் டெவோன் எனும் இடத்தில் ஒரு செல்வந்தத் தந்தைக்கும் அமெரிக்கத் தாய்க்கும் பிறந்தவராவார். 1914 ஆம் ஆண்டில் முதலாம் உலக யுத்தம் ஆரம்பிக்க முன்னர் இவர் ஆச்சிபோல்ட் கிறிஸ்டி (Archibald Christe) என்ற விமானியை திருமணம் செய்திருந்தார். தொடர்ந்து 1920 இல் இவரது முதல் நாவலான 'மேடர் ஓஃப் அக்ரொயிட்' (The Murder of Ackroyd) வெளிவந்தது.

அகதா கிறிஸ்ரியின் செல்வாக்கை இவருடைய நாவல்கள் விற்பனையாகிய எண்ணிக்கையில் இருந்து அறிந்துகொள்ள முடியும். ஷேக்ஸ்பியருக்கு அடுத்து இவரது நாவல்களைப் போன்று வேறு எவரது நாவல்களும் விற்பனையாகியதில்லை. கின்னஸ் சாதனை நூலிலும், அதிகமாக வெற்றிகரமான நாவல்களைப் படைத்தவர் என அகதா கிறிஸ்ரியை குறிப்பிட்டுள்ளனர்.

இவரது துப்பறியும் நாவல்களை வாசிப்பவர்கள் இறுதிவரை முடிவை தீர்மானிக்க முடியாத அளவிற்கு சதிகள் கதையில் பின்னப்பட்டிருக்கும். முடிவில் மர்மம் துலக்கப்படும்போது, வாசகர்களுக்கு அது திகைப்பை ஏற்படுத்துமாப் போல் இருக்கும். அகதா கிறிஸ்ரி ஒரு சிறந்த நாடகாசிரியருமாவார். இவருடைய 'எலிப்பொறி' என்ற நாடகம் தொடர்ந்து 30 வருடங்களாக 'லண்டன் வெஸ்ற்' என்ற நாடக அரங்கில் ஆரங்கேறியது. 1920, 1930 களில் துப்பறியும் நாவல்களைப் படைத்தவர்களில் அகதா கிறிஸ்ரியின் பெயர் அழியாது நிலைத்துள்ளது. 1976 இல் அகதா கிறிஸ்ரி இயற்கை எய்தினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# அலிபாபாவும் 40 திருடர்களும் 23

கதை, ஓவியம்: வேணு வாரியத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

* பிரடரிக் நோத் ஆள்பதியின் காலத்தில் நடந்த முக்கியமான வரலாற்று நிகழ்வு என்ன?

இலங்கை பிரித்தானியா வசம் இருந்தபோது கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்து அவர் படுதோல்வி அடைந்தார்.

* உலகிற்கு அடிப்படை மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய நாடு எது?

ஐக்கிய அமெரிக்கா



* உலகில் மக்கள் வாழ உகந்த நாடுகளின் தரவரிசையில் (2015) முதல் நான்கு இடங்களை பெறும் நாடுகள் எவை?

i. சுவிட்சர்லாந்து ii. சிங்கப்பூர்
iii. ஸ்பெய்ன் iv. ஜப்பான்

* விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?



கலிலியோ கலிலி

* சர்வதேச வங்கியில் இலங்கை எப்போது இணைந்துகொண்டது?

1950.08.24 இல்

* ATM என்பதன் விரிவாக்கம் என்ன?





Automated Teller Machine

* தேசிய சின்னம் எப்போதுமுதல் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றது?

1972 முதல்

* இலங்கை நாடாளுமன்றத்தில் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் யார்?



கலாநிதி என்.எம்.பெரேரா

* ஐக்கிய இராச்சியத்தின் தேசிய கீதத்தின் முதல் வரிகள் என்ன?

God Save the Queen...

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# உலகில் பிரபல்யமானவர்கள்

## அகதா கிறிஸ்ரி

மர்மமும் திகிலும் நிறைந்த நாவல்களை எழுதி வாசகர்களின் பாராட்டையும், வரவேற்பையும் பெற்ற நாவலாசிரியர்களில் சென்ற நூற்றாண்டில் பிரபல்யமாக விளங்கியவர்தான் அகதா கிரிஸ்டி ஆவார். அரை நூற்றாண்டிற்கு மேலாக கற்பனை நாவல்களில் அரசியாக அவர் செல்வாக்குப் பெற்று வந்தார்.



அகதா கிறிஸ்ரி 1891 இல் டெவோன் எனும் இடத்தில் ஒரு செல்வந்தத் தந்தைக்கும் அமெரிக்கத் தாய்க்கும் பிறந்தவராவார். 1914 ஆம் ஆண்டில் முதலாம் உலக யுத்தம் ஆரம்பிக்க முன்னர் இவர் ஆச்சிபோல்ட் கிறிஸ்டி (Archibald Christe) என்ற விமானியை திருமணம் செய்திருந்தார். தொடர்ந்து 1920 இல் இவரது முதல் நாவலான 'மேடர் ஒஃப் அக்ரொயிட்' (The Murder of Ackroyd) வெளிவந்தது.

அகதா கிறிஸ்ரியின் செல்வாக்கை இவருடைய நாவல்கள் விற்பனையாகிய எண்ணிக்கையில் இருந்து அறிந்துகொள்ள முடியும். ஷேக்ஸ்பியருக்கு அடுத்து இவரது நாவல்களைப் போன்று வேறு எவரது நாவல்களும் விற்பனையாகியதில்லை. கின்னஸ் சாதனை நூலிலும், அதிகமாக வெற்றிகரமான நாவல்களைப் படைத்தவர் என அகதா கிறிஸ்ரியை குறிப்பிட்டுள்ளனர்.

இவரது துப்பறியும் நாவல்களை வாசிப்பவர்கள் இறுதிவரை முடிவை தீர்மானிக்க முடியாத அளவிற்கு சதிகள் கதையில் பின்னப்பட்டிருக்கும். முடிவில் மர்மம் துலக்கப்படும்போது, வாசகர்களுக்கு அது திகைப்பை ஏற்படுத்துமாப் போல் இருக்கும். அகதா கிறிஸ்ரி ஒரு சிறந்த நாடகாசிரியருமாவார். இவருடைய 'எலிப்பொறி' என்ற நாடகம் தொடர்ந்து 30 வருடங்களாக 'லண்டன் வெஸ்ற்' என்ற நாடக அரங்கில் ஆரங்கேறியது. 1920, 1930 களில் துப்பறியும் நாவல்களைப் படைத்தவர்களில் அகதா கிறிஸ்ரியின் பெயர் அழியாது நிலைத்துள்ளது. 1976 இல் அகதா கிறிஸ்ரி இயற்கை எய்தினார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# அலிபாபாவும் 40 திருடர்களும்

23 கதை, ஓவியம்: வேனு வாரியத்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நடத்தப்படும் போட்டிகளில் உணவுப் போட்டிகள் மிகவும் பிரபல்யம் பெற்றவையாகும். உட்கொள்ள முடியாத உணவு வகைகளையும் உணவிற்கு ஆகாதவற்றையும் இந்தப் போட்டிகளில் உண்ண வேண்டியிருப்பதைக் காண முடியும். உயிருடன் இருக்கும் விலங்குகள், முட்டை வகைகள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை சமைக்காமல் பச்சையாக இந்த போட்டிகளில் சாப்பிட நேரிடும். குதூகலத்தினை மட்டுமே இலக்காகக் கொண்டே இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. அத்தகைய சில போட்டிகள் வருமாறு;



# உலகம் முழுவதும் புதுமையான உணவுகளை உண்ணும் போட்டிகள்

## நத்தைகளை உண்ணும் சர்வதேசப் போட்டி



அமெரிக்காவின் லுசியானா பிராந்தியத்தின் நியூ ஓர்லியன்சில் நடைபெறும் இந்த போட்டியின் சிறப்பம்சம் என்னவென்றால், மிகவும் வேகமாக நத்தைகளை உட்கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த போட்டியின் வெற்றியாளருக்கு பெருமளவான ரொக்கப் பரிசு வழங்கப்படும். நத்தைகள் நம் நாட்டில் பிரபல்யமான உணவாக இல்லாதபோதிலும் பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளில் இது பிரபல்யமான ஓர் உணவாகும்.


2011 ஆம் ஆண்டில் பெற் பார்ட்டலொட் என்பவர் 8 நிமிடத்தில் 468 நத்தைகளை உட்கொண்டு லுசியானா பிராந்தியத்தின் நத்தைகள் உட்கொள்ளும் போட்டியில் உலக சாதனையினைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளைப்பூண்டு சாப்பிடும் போட்டி



இங்கிலாந்தின் டோசட், சிடியொக் பகுதியில் இந்த போட்டி நடைபெறுகின்றது. 2014 இல் டேவிட் கிறின்மன் என்பவர் 60 செக்கன்களில் 33 வெள்ளைப்பூண்டுகளை உட்கொண்டு சாதனை படைத்துள்ளார்.

## முதலை முட்டைகளை உண்ணும் போட்டி



தாய்லாந்தின் முதலைப் பண்ணையில் இப்போட்டி நடைபெறுகின்றது. வருடாந்தம் நிகழும் இப்போட்டியில் இயலுமானவரை 10 முட்டைகளை உட்கொள்ள வேண்டும். தாய்லாந்தின் சுற்றுலாப் பயணத்துறையை ஊக்குவிக்கவே இந்த போட்டி நடத்தப்படுகின்றது.

## 'சுஷி' உண்ணும் போட்டி



ஜப்பானின் பிரபல்யமான உணவான 'சுஷி' சமைக்கப்படாத மீன்களினால் தயாரிக்கப்படும் உணவாகும். சோறு, காய்கறிகள் மற்றும் பழங்களுடன் சேர்த்து இவை தயாரிக்கப்படுகின்றது. சுஷியினை உட்கொண்டு சாதனை படைத்துள்ளவர் தொழில்சார் ரீதியில் சுஷி உணவினை உட்கொள்ளும் டிம் ஜானுஸ் என்பவராவார். இவர் 6 நிமிடங்களில் 141 சுஷி துண்டுகளை உட்கொண்டுள்ளார்.

## 'ஜெலிப்பினோ' காரமிளகாய் உண்ணும் போட்டி



அதிக காரமான மிளகாய் வகைகளை உண்ணும் போட்டிகளும் நடைபெறுகின்றன. இதில் 'ஜெலிப்பினோ' வகை மிளகாய் உண்ணும் போட்டி முக்கியம் பெறுகின்றது. அமெரிக்காவின் 'டெக்ஸாஸ்' மாநிலத்தில் இந்தப் போட்டி நடைபெறுகின்றது. 2006 ஆம் ஆண்டு 62 வயதான ஓய்வுபெற்ற நபர் ஒருவர் 8 செக்கன்களில் 247 மிளகாய்களை உட்கொண்டு, 'ஜெலிப்பினோ' காரமிளகாய் உண்ணும் போட்டியில் உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

## பொரித்த காளான் சாப்பிடும் போட்டி



பென்சில்வேனியாவில் இப்போட்டி வருடாந்தம் நடைபெறுகின்றது. 8 செக்கன்களுக்குள் 4 கிலோ காளான்களை சாப்பிட முடியுமானால் காளான் சாப்பிடுவதில் உலக சாதனை படைக்க முடியும்.

## உறைப்பான கறிகள் சாப்பிடும் போட்டி



ஸ்கொட்லாந்தின் எடின்பர்கில் நடைபெறும் இந்த போட்டியில் பங்குபற்றுவதற்கு முன்னர் இப்போட்டியின்போது தமக்கு ஏற்படக் கூடிய உயிர் ஆபத்திற்கு தாமே பொறுப்பு என்பதை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றில் போட்டியில் பங்குபற்றுவோர் கைச்சாத்திட வேண்டும். ஐரோப்பியர்களுக்கு உரித்தான மென்மையான உணவு வகைகளுக்கு நேர் எதிரான அதிக உறைப்பு, காரம் மற்றும் மிளகாய் சேர்க்கப்பட்ட உணவுகளே, இங்கு போட்டியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

## உயிருடன் கரப்பான் பூச்சிகளை உண்ணும் போட்டி



இங்கிலாந்தின் டர்பியஷரில் இப்போட்டி நடைபெறுகின்றது. உயிருள்ள கரப்பான் பூச்சிகளை உட்கொள்ளும் போட்டியானது, ஏனைய போட்டிகளுடன் ஒப்பிடுகையில் சிரமமானதொரு போட்டியாகும். உயிருள்ள கரப்பான் பூச்சிகளை உட்கொண்டு சாதனை படைத்த நபர் டர்பியஷர் வாசியாகும். இவர் நிமிடத்திற்கு 36 கரப்பான் பூச்சிகளை உட்கொண்டு சாதனை படைத்துள்ளார்.

## ஐஸ்கிரீம் சாப்பிடும் போட்டி



ஐஸ்கிரீம் சாப்பிடும் போட்டி உலகில் அனைத்து நாடுகளிலும் பரவலாக இடம்பெற்றாலும் 2014 இற்கான சர்வதேச ஐஸ்கிரீம் போட்டி புளோரிடாவில் ஆரம்பமாகியது. ஜோ செஸ்நட் என்பவரே, சர்வதேச ஐஸ்கிரீம் சாதனைப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவராவார். அவர் 6 செக்கன்களில் 7 லீற்றர் ஐஸ்கிறீமினை சாப்பிட்டு இந்த சாதனையினைப் படைத்துள்ளார்.

## பட்டர் சாப்பிடும் போட்டி



இந்த போட்டியில் போட்டியாளர்களுக்கு மிகப்பெரிய பட்டர் துண்டினை விழுங்குவதற்கு வழங்கப்படும். பாணுடன் சாப்பிடப் பொருத்தமான உணவாக இது இருந்தாலும் அதனை தனியே பெருமளவில் சாப்பிடுவது என்பது கொடுமையாகவே இருக்கும். 2001 ஆம் ஆண்டு டொன் லர்மன் என்பவரால் உப்புத் தூவப்பட்ட 113 கிராம் பட்டர் 5 செக்கன்களில் உண்டமையே தற்போதைய சாதனையாகும்.

பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கரை தொடும் சீனப் பெருஞ்சுவர்



உலகில் அதிசயிக்கத்தக்க மனித நிர்மாணங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் பற்றி நாம் அறிந்துள்ளோம். அதனைப் படங்களிலும் கண்டுள்ளோம். ஆனால், சீனப் பெருஞ்சுவர் கரை தொடும் இடத்தை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? இப்பகுதி Old Dragon's Head என்று அழைக்கப்படுகின்றது. இது சீனப் பெருஞ்சுவரின் கிழக்கு எல்லைப் பகுதியாகும். ஷென்ஹாய்குவேன் மாவட்டத்தின் கின்ஹுவேங்டோ நகர்ப் பகுதியிலேயே இந்த கரை தொடும் பகுதி உள்ளது. அந்தப் பகுதி இப்படித்தான் இருக்குமாம்...

# பசுமை ரயில் சுரங்கப்பாதை





உக்ரேன் நாட்டின் க்ளெவென் நகரில் பச்சைப் பசேலென மரங்கள் வளர்ந்துள்ள ரயில் சுரங்கப் பாதையொன்று உள்ளது. சுமார் 3 கி.மீற்றர் தூரம் கொண்ட இந்த ரயில் பாதையின் இரு மருங்குகளிலும் பச்சைப் பசேலென தாவரங்கள் வளர்ந்து சுரங்கம் போல் காணப்படுகின்றது. இதுவொரு தனியார் ரயில் சேவைக்கான பாதையாகும்.

இப்பகுதியிலுள்ள மரத் தொழிற்சாலை ஒன்றுக்கு ரயில்மூலம் மரக்குற்றிகளை எடுத்துச் செல்வதற்காகவே இந்த பாதை பயன்படுத்தப்படுகின்றது.

பல வருடங்களுக்கு முன்னர் இந்த ரயில் பாதை அமைக்கப்படும்போது, அங்குள்ள தாவரங்கள் அழிக்கப்படாமல் சுதந்திரமாக வளரும் வகையில் அப்படியே விடப்பட்டுள்ளன. இன்று பச்சைப் போர்வை விரித்தாற்போல் அழகாகவும் இயற்கையோடு இணைந்ததாகவும் காணப்படும் இந்த ரயில் சுரங்கப்பாதை, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப் பெரிய வாழும் உயிரினம்



உலகின் மிகப் பெரிய வாழும் உயிரினம் (largest living organism) எதுவென்று தெரியுமா? அதுதான் 'தேன் பூஞ்சை' (honey fungus) ஆகும். இது Armillaria எனும் பூஞ்சை இனத்தைச் சேர்ந்தது. அமெரிக்காவின் கிழக்கு ஒரெகன் மாநிலத்தில் காணப்படும் இந்த பூஞ்சை வகை, நிலப்பரப்பில் சுமார் 2,200 ஏக்கர் பரப்பளவிற்கு பரந்து காணப்படும். இதன் அறிவியல் பெயர் *Armillaria solidipes* என்பதாகும்.

இவ்வகை பூஞ்சைகள், மரங்களின் வேர்களில் உள்ள நீரையும் சத்துக்களையும் உறிஞ்சி உயிர்வாழும் தன்மையுடையவை. ஒரெகன் மாநிலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் காடுகளில் மரங்கள் அழிந்துவருவதைக் கண்டு 1998 ஆம் ஆண்டளவில் அப்பகுதியை ஆராய்ந்ததை அடுத்தே, இந்த தேன் பூஞ்சைகள் பற்றி கண்டறியப்பட்டது. சுமார் 2,400 வருடங்களுக்கு முந்திய வரலாற்றைக் கொண்ட இந்த பூஞ்சை இனம், சுமார் 7,200 ஆண்டுகள் வரை உயிர்வாழக்கூடியதாம்!

# இவ்வார கார்ட்டூன் படம்







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஒக்டோபர் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 21, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org